வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 05 05.11.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 337 பக்கங்கள் : 12

# நாட்டை பிளவுபடுத்தும் நோக்கு பிரபாகரனுக்கு இருக்கவில்லை!

## பாராளுமன்றில நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, டிசெம்பர் 05

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு சிங்களவர்களுடன் யுத்தம் செய்து, இந்த நாட்டை பிளவுபடுத்தும் நோக்கம் இருக்க வில்லை என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேறறு உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

நீதித்துறை ஒதுக்கீட்டு விவாதத்தின் போது பாராளு மன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மூன்று விடயங்களை சுட்டிக் காட்டிப்பேசினார்.

அதில் மாவீரர் தினத்திற்கு நீதிமன்றங்கள் தடை உத்தரவை நிராகரித்தமையையிட்டு நீதி அமைச்சர் வெட்கமடைய வேண்டும் என்றவாறும், பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற வகையிலும் சில கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி என்ற வகையில் அவர் வெளி யிட்ட கருத்தையிட்டு வெட்க மடைய வேண்டும். யுத்தத்தை நிறைவுக்கு 11

# பொன்னம்பலம் ஓர் இனவாதி!

## சபையில் நீதி அமைச்சர் சாடல்

*கொழும்பு, டிசெ. 05*

"மலையக மக்களின் குடியு ரிமையை பறிக்கும் சட்ட மூலத்துக்கு ஜீ. ஜீ. பொன் னம்பலம் அன்று ஆதரவு வழங்கினார். அன்று அமைச்சு பதவி இருந்தபோது அது நல்ல முடிவாக இருந்தது. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஓர் இன வாதி." - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 11

# யாழில் டெங்கு தீவிரம் இரண்டு பேர் உயிரிழப்பு

## உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை

*யாழ்ப்பாணம், டிசெ. 05*

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்படுபவர் களின் எண்ணிக்கை அதிக ரித்து வரும் நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது குறித்து யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ் வரன் கருத்துத் தெரிவிக்கையில்

யாழ். மாவட்டத்தில் கடந்த 11 மாதங்களில், 2 ஆயி ரத்து 203 நோயாளிகள் இனங்காணப்பட் 11

# தன்னைக் கொல்ல வந்தவர்களை மன்னிக்க சுமந்திரன் எம்.பி. தயாரா?

## அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கேள்வி

*கொழும்பு, டிசெ. 05*

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்ப்பவராயின் அவரை கொலை செய்ய வந்த ஐந்து இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு அவர் கூறவேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நீதி அமைச்சர் தொடர்பில் கடந்த சனிக்கிழமை பாராளுமன்றில் 11

# உணவு பொருள் மீதான இறக்குமதி வரி நீடிப்பு

*கொழும்பு, டிசெ. 05*

நாட்டில் தெரிவு செய்யப் பட்ட சில உணவு பொருட் கள் மீதான இறக்குமதி வரி நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவினால் வரி நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, தயிர், பெரிய வெங்காயம், அப்பிள், ஒரஞ்சு மற்றும் சில மீன் வகைகள் உள்ளிட்ட உணவுப் பொருட் கள் மீதான இறக்குமதி வரி இவ்வாறு நீடிக்கப்பட் டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் பணியாளர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டுக்கான வருமானம் 15 வீதம் 11

# வாள்வெட்டுக்குழு நேற்று தெல்லிப்பழையில் அடாவடி!

## பொலிஸார் துப்பாக்கி பிரயோகம்

*யாழ்ப்பாணம், டிசெ. 05*

தெல்லிப்பழை பகுதியில் வாள்வெட்டு குழு ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டி ருந்த நிலையில், அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் தெல்லிப் பழை பொலிஸ் நிலையத் திற்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பகுதியில் ஹைஏஸ் ரக வானில் வந்த இனந்தெரியாத குழு மோட்டார் சைக்கிளில் 11

# நாகபட்டினம் - திருமலை குழாய் வழி எண்ணெய் விநியோகம் குறித்து பேச்சு

*கொழும்பு, டிசெ. 05*

நாட்டில் எரிபொருள் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இந்தியாவில் உள்ள நாகபட்டினத்துக்கும் திருகோணமலைக்கும் இடையே எண்ணெய் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரை யாடல் நடைபெற்றது.

இதில், போக்குவரத்து 11

# பருத்தித்துறை நீதிமன்றில் குழப்பம் பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

*யாழ்ப்பாணம், டிசெ. 05*

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றபோது, மது போதையில் விசாரணைக்கு இடையூறு செய்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் இந்த சம்பவம் இடம்பெற்றது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 33 வயதான பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

அவரது சகோதரியின் மகன் மீது வழக்கொன்று நிலுவை யில் உள்ளது. அந்த இளைஞன் வெளிநாடு செல்வதற்காக நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்திருந்தனர். 11

# தமிழ் இளைஞர்களை அழிப்பதற்கே வடக்கில் போதை வியாபாரம் தீவிரம்

## வினோ நோகராதலிங்கம் குற்றச்சாட்டு

*கொழும்பு, டிசெ. 05*

யுத்தத்தில் எவ்வாறு தமிழ் இளைஞர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்களோ, அதேபோன்று போதைப் பொருள் ஊடாகவும் தமிழ் இளைஞர்கள் அழிக்கப்படுகிறார்கள்.

வடக்கில் தீவிரமடைந்துள்ள போதைப்பொருள் பாவனையில் விற்பவர் யார், விநியோகிப்பவர் யார் என்பதை அறிந்தும் பொலி ஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் உள்ளார்கள் என



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

மாவீரர் தினத்தன்று வெளியிடப்பட்ட காணொலி பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தக் காணொலியை புலம்பெயர் தேசத்திலோ அல்லது தாயகத்திலோ யாரும் கண்டுகொள்ளவில்லை என்பதும் தெரிந்ததுதான்.

அதற்கு பிரதான காரணம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புதல்வி இப்போது உயிருடன் இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததால் தான் என்பதற்கு அப்பால், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் மூலம் துவாரகாவை உருவாக்கப்போகின்றார்கள் என்று பலரும் எதிர்பார்த்திருக்க சுவிஸ் நாட்டில் வாழும் ஒருவருக்கு 'மேக்கப்' போட்டு கமெராவுக்கு முன்னால் நிறுத்தி அசிங்கப்படுத்தி விட்டார்கள் என்பதும் அதற்கு காரணமானது. இது ஒட்டுமொத்த தமிழர்களையும் உலகின் முன்னால் கேவலப்படுத்தியிருக்கின்றது என்பது தெரிந்ததுதான்.

இல்லாத ஒருவரை தொழில் நுட்பத்தின் மூலம் உருவாக்கியிருந்தால்கூட, அதனை பொறுத்திருக்கலாம். ஆனால், சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரை, அதுவும் யுத்தம் நடைபெற்ற போது- துவாரகா களத்தில் நின்று போராடிக் கொண்டிருந்த போது அங்கே நடமாடிய ஒருவரை இவர்தான் துவாரகா என்று கொண்டு வந்து நிறுத்திய தன் மூலம் ஒட்டுமொத்த தமிழர்களையும் 'முட்டாள்கள்' ஆக்கியிருக்கிறார்கள் ஒரு சிலர்.

ஆனால், அந்த விடயம் நமது தொப்புள்கொடி உறவுகள் மத்தியில் இன்னமும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது என்பதை அங்குள்ள ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளும் விமர்சனங்களும் நமக்கு இப்போதும் காட்டிநிற்கின்றன.

தமிழகத்தில் முதல்தர நாளிதழான தினமணி கூட, அந்தச் செய்தியை வெளியிட்டபோது, பிரபாகரனின் புதல்வி மாவீரர் உரையாற்றினார் என்றுதான் செய்தி வெளியிட்டது என்றால், அவர்களின் இலங்கை தமிழர் பற்றிய- அல்லது ஈழம் பற்றிய புரிதல்- அறிதல் எந்தளவு தூரத்தில் இருக்கின்றது என்பதை புரிந்துகொள்ளலாம்.

'ஈழநாடு'வில் வாராவாரம் கட்டுரையை எழுதிவரும் மூத்த பத்திரிகையாளர்கூட, அந்தச் செய்தியை விலாவாரியாக விமர்சித்து பிரபாகரனின் புதல்வியின் படத்தையும் இப்போது வெளியான காணொலியில் காணப்பட்டவரின் படத்தையும் பல்வேறு கோணங்களில் ஒப்புநோக்கி வெளியான படங்களுடன் தனது கட்டுரையை எழுதியிருந்ததையும் வாசகர்கள் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

ஈழத்துச் செய்திகள், நடக்கின்ற அரசியல் முன்னெடுப்புகள் பற்றியெல்லாம் ஆழ்ந்த பார்வையைக் கொண்ட அவரே அதனைப்பற்றி அலசுகிறார் என்றால், சாதாரண தமிழ்நாட்டு ஊடகர்கள் எப்படி பார்த்திருப்பார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

அந்தச் செய்தியை ஈழநாடு கண்டுகொள்ளவில்லை என்பதைக்கூட அவரால் புரிந்து கொள்ள முடியவில்லையே.

ஈழத்து பிரச்னைகள் பற்றி தமிழகத்து ஊடகவியலாளர்களே எப்படியான புரிதலோடு இருக்கிறார்கள் என்றால், சாதாரண தமிழக மக்கள் எப்படி புரிந்து வைத்திருப்பார்கள் என்பது நாம் தெரிந்து கொள்ளக்கூடியதே.

நமது பிரச்னைகளை தமிழகத்து தலைவர்கள், பிரமுகர்கள் எப்படி புரிந்துவைத்திருக்கிறார்கள் என்பதற்கு கடைசி உதாரணம் ஒன்றுதான் நடிகர் சத்தியராஜ் தெரிவித்திருக்கின்ற ஒரு செய்தி.

தமிழக தொலைக்காட்சியான 'ஷீ தமிழ்' தொலைக் காட்சியில் நடக்கும் 'சரிகம' பாடல் போட்டி நிகழ்ச்சியில் ஈழத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள் கலந்துகொண்டு கடைசி சுற்றுவரை முன்னேறியிருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சிக்கு உரியதுதான். அந்தச் சிறுமிகளில் ஒருவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். மற்றையவர் மலையகத்தைச் சேர்ந்தவர்.

அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட சத்தியராஜ், மலையகத் தமிழர்கள் பற்றியும் அவர்கள் இப்போதும் குடியுரிமை இல்லாதவர்களாக வாழ்கின்றார்கள் என்றும் சொன்னதோடு நிற்காமல், அங்கே போட்டியில் கலந்து கொண்ட மலையக சிறுமியின் தந்தையை அழைத்து 'உங்களுக்கு குடியுரிமை இருக்கிறதா?' என்று கேட்க அவரும் இல்லை என்று தலையாட்டினார்.

அவரிடம் 'குடியுரிமை இருக்கிறதா?' என்று அவர் கேட்டது அவருக்கு புரியவில்லை என்பது அவரது பதிலிலேயே தெரிந்தது. சிலவேளை உங்களுக்கு இலங்கை பிரஜா உரிமை இருக்கிறதா என்றோ அல்லது 'சிற்றிசன்' இருக்கிறதா என்றோ கேட்டிருந்தால் அவர் சரியாகப் பதிலளித்திருப்பார் என்று நினைக்கின்றேன்.

இன்று மலையகத்தில் தமிழர்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டாலும குடியுரிமை இல்லாமல் அங்கு யாரும் வாழவில்லை என்பது சத்தியராஜூக்கு தெரிந்திருக்கவில்லை.

குடியுரிமை இல்லாத ஒருவர் எப்படி சென்னையில் நடக்கும் அந்த போட்டியைப் பார்க்க இலங்கையிலிருந்து பாஸ்போர்ட் இல்லாமல் வந்தார் என்று சத்தியராஜ் ஏன்தான் கேட்காமல் விட்டாரோ தெரியவில்லை.

நடிகர் சத்தியராஜ் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாடு உள்ளவர்தான். அவரது தமிழ்த் தேசிய உணர்வில் யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால், அதற்காக அவர் எல்லாம் தெரிந்ததுபோல தவறான பரப்புரைகளை செய்தால், அது தமிழர்களுக்கு உதவப் போவதில்லை என்பதற்கு அப்பால் பாதகமான முடிவுகளையும் கொண்டுவந்து சேர்த்துவிடலாம்.!

**- ஊர்க்குருவி.**

# 25,000 ஆசிரியர்கள் நியமனம் ஒன்பது மாதங்களாக தாமதம்

கொழும்பு, டிசெ. 05

உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு காரணமாக 25,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் ஒன்பது மாதங்களாக தாமதமாகியுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதன்காரணமாக எதிர்வரும் பாடசாலை விடுமுறைகள் நிறைவடைவதற்கு முன்னர் தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜயரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், விடுமுறை முடிவதற்குள் ஆட்சேர்ப்பை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகக் கூறினார்.

கடந்த காலத்திலிருந்து மாகாண மட்டத்தில் நிலவும் ஆசிரியர் சமநிலையின்மைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## தற்காலிகமாக மூடப்பட்ட புதிய களனி பாலம் திறப்பு

கொழும்பு, டிசெ. 05

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த புதிய களனி பாலம் நேற்று காலை 6 மணி முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய திருத்தப்பணிகள் காரணமாக களனி பாலம் மூடப்பட்டிருந்தது.

திருத்தப் பணிகளின் இரண்டாம் கட்டத்தின் கீழ் குறித்த பாலம் டிசெம்பர் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 09 மணி முதல், டிசெம்பர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06 மணி வரை மீண்டும் மூடப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மூன்றாம் கட்டத்தின் கீழ் டிசெம்பர் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 09 மணி முதல் டிசெம்பர் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06 மணி வரை புதிய களனி பாலம் மூடப்படவுள்ளது.

பாலம் மூடப்படும் காலப்பகுதியில் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (அ)

## போதைப் பொருள் விற்ற இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 05

அநுராதபுரம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ விசேட அதிரடிப் படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 38 வயதுடையவர்கள் என தெரிய வந்துள்ளது.

அவர்களிடமிருந்து சுமார் 400 போதை மாத்திரைகள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (அ)

## ஒக்ரோபர் மாதத்தின் அஸ்வெசும கொடுப்பனவு வங்கிகளில் வைப்பு

கொழும்பு, டிசெ. 05

அஸ்வெசும நலன்புரி உதவித்தொகையை பெற தகுதியுடைய 14 இலட்சத்து 6,932 குடும்பங்களுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி அவர்களுக்கான 8,775 மில்லியன் ரூபாய் நிதி தற்போது வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், இன்று முதல் குறித்த தொகை பயனாளர்களின் கணக்குகளில் வைப்பிலிடப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

## பொலிஸ் ஆணையர் பதவியை ஏற்படுத்த அரசாங்கம் திட்டம்

கொழும்பு, டிசெ. 05

பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவியொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் இன்னும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளதாகவும், அமைச்சரவைக்கு அறிவித்த பின்னர் எதிர்காலத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவி என்பது ஜனாதிபதியால் நிறுவப்படும் ஒரு சிவில் பதவியாகும்.

எவ்வாறாயினும், அந்த பதவிக்கு நியமிக்கப்படுபவரிடம், பொலிஸ் நிர்வாகத்தை கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படவுள்ளது.

இதன்படி, முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவரது பதவி காலம் 3 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவின் பெயர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 5 இலட்சம் குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு துண்டிப்பு!

### சபையில் குறிப்பிட்டார் சஜித்

கொழும்பு, டிசெ. 05

நாட்டில் 5 லட்சம் மின் பயனாளிகளின் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கானோருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் கனமழை பெய்தது. இதனால் நீர்மின் உற்பத்தி அதிகரித்தது. அதன்மூலம் இலங்கை மின்சார சபை பெரும் இலாபம் ஈட்டியது. எனவே, மின் கட்டண அதிகரிப்புக்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். ஆனால், அநீதியான முறையில் கட்டண அதிகரிப்பு இடம்பெற்றது.

மின் கட்டணம் செலுத்த முடியாததால், ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மின்சார நுகர்வோரின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்படும் என மேலும் பல இலட்சம் பேருக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

அபயாராம விகாரையில் கூட சட்டவிரோதமாக மின்சார இணைப்பை துண்டிக்க முற்பட்டுள்ளனர். நீர்மின் உற்பத்தி அதிகரித்து மின்சார சபை கோடி கோடியாக இலாபம் ஈட்டும் போது, தேவையில்லாமல் மின் கட்டணத்தை அதிகரித்து 50 இலட்சம் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பட்டுள்ளது. இது நியாயமா?-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
05.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் சர்வதேச நகர்வுகள்?

டுபாயில் இடம்பெற்றுவரும் காலநிலை தொடர்பான சர்வேதச மகாநாட்டில் ரணில் பங்குபற்றி பூமியை பாதுகாப்பது தொடர்பில் உரையாற்றியிருக்கின்றார். இந்த மகாநாட்டில் பங்குபற்றியிருக்கும் உலக தலைவர்கள் பலரை தொடர்ந்து சந்தித்து வருகின்றார். உலகின் முதல்தர பணக்காரரும் பெரும் முதலீட்டாளருமான பில் கேட்ஸுடன் இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் கலந்துரையாடியிருக்கின்றார். இதேபோன்று, இந்தியாவின் செல்வாக்குமிக்க ஆன்மீக தலைவரும் பிரதமர் மோடிக்கு நெருக்கமானவருமான ஜக்கி வாசுதேவை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். ஜக்கி வாசுதேவ் சில மாதங்களுக்கு முன்னர், எரிக் சொல்ஹெய்ம் பின்புலத்தில் நோர்வே சென்றிருந்தார். இதேபோன்று எரிக் சொல்ஹெய்ம் அண்மைக்காலமாக பசுமை முதலீடுகளை இலங்கையை நோக்கி ஈர்ப்பதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் செய்த முதல் நகர்வு – எரிக் சொல்ஹெய்மை அவரின் காலநிலை ஆலோசகராக நியமித்தமையாகும். இது பலரும் எதிர்பாராத ஒரு நகர்வாகவே இருந்தது. சொல்ஹெய்ம் ஐக்கிய நாடுகள் சபையில் காலநிலை விவகாரங்களுக்கான செயலாளர் நாயகமாக இருந்தபோது அவரின் தனிப்பட்ட செலவுகள் தொடர்பில் ஐ. நா. குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து அவர் அந்தப் பதவியிலிருந்து வெளியேறினார். அதன் பின்னர், 'ஒரு பாதை ஒரு வலயத்துக்கான பசுமை திட்டம்', என்னும் அமைப்பில் இணைந்து கொண்டார். அதேவேளை, சமவேளையில் உலகளவிலான காலநிலை அமைப்புகளிலும் அங்கத்துவம் வகித்துவருகின்றார். இவ்வாறான ஒருவரை ரணில் ஏன் திடீரென்று தனது காலநிலை விவகாரங்களுக்கான சர்வதேச ஆலோசகராக நியமித்திருந்தார் என்பதற்கான பதிலை இப்போது காண முடிகின்றது.

சொல்ஹெய்மின் சர்வதேச தொடர்புகளும் அவரது தனிப்பட்ட உறவுகளும் பலமானது. அவரது தனிப்பட்ட உறவுகளை ரணிலின் நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிகளுக்காக பயன்படுத்திவருகின்றார். இவ்வாறானதோர் எண்ணத்துடன்தான் ரணில் மிகவும் சரியாகவும் தூரநோக்குடனும் சொல்ஹெய்மின் ஆற்றலை இலங்கைக்கான முதலீடாக மாற்றியிருக்கின்றார். ஆனால், நமது சூழலிலோ நடப்பது வேறு. அதாவது, சொல்ஹெய்ம் போன்றவர்களை இப்போதும் யுத்த கால அனுபவங்களின் வழியாக மட்டுமே நோக்க முற்படுகின்றனர். சிலரின் தொடர்புகளை எவ்வாறு தேசத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவது என்பது தொடர்பில் நமது சூழலில் சிந்திக்க முடியவில்லை. ஆனால், ரணில் அவரின் தனிப்பட்ட தொடர்புகளை மிகவும் கச்சிதமான தனது சர்வதேச நகர்வுகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றார்.

ரணில் தொடர்பில் சொல்ஹெய்ம் ஒருமுறை இவ்வாறு கூறியிருந்தார். "ரணில் ஒரு மிகச்சிறந்த புத்திஜீவி. ஆனால், அவருக்கு ஜன வசியம் இல்லை." சொல்ஹெய்மின் கூற்றில் தவறில்லை. ரணிலின் ஆற்றலை சாதாரண சிங்கள மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை – இதனால் ஆற்றலிருந்தும் ரணிலால் அவரின் ஜனாதிபதி கனவை நிறைவு செய்ய முடியவில்லை.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் ஒன்றில்தான் ரணில் போட்டியிட்டு வெல்லுவதற்கு முயற்சிப்பதற்கான இறுதி சந்தர்ப்பமாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில் ரணில் தனது வெளியுலக தொடர்புகளை வெற்றிகரமாக கையாண்டு வருகின்றார். ஆனால், வெளியுலக தொடர்புகளை கையாளுவது போன்று உள்நாட்டு விடயங்களை கையாள முடியாது. ஏனெனில், உள்நாட்டில் ஒருவரின் செல்வாக்கை வெறும் அறிவு மட்டும் தீர்மானித்து விடுவதில்லை.

அடுத்துவரும் மாதங்களில் வெளியுலக விடயங்களை கையாளுவதில் தனது ஆற்றலை காண்பித்து வரும் ரணில் எவ்வாறு உள்ளக அரசியல் சிக்கல்களை கையாளப் போகின்றார் என்பதற்கான பதிலை தேடும் முயற்சிகள் தீவிரமடையலாம்.

# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் உயர்வு!

*கொழும்பு, டிசெ. 05*

*நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.*

*தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 77,487 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 46 பேர் உயிரிழந்தனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.*

*அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.*

*தற்போது பெய்து வரும் கடும் மழையுடனான காலநிலையினால் குறித்த பகுதிகளில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள நிலையில், குறித்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.*

*டெங்கு நோய் உறுதியானவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலிருந்து இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் மீண்டும் திறப்பு

*கொழும்பு, டிசெ. 05*

*தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.*

*பகிடிவதை தொடர்பான சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டு, குறித்த பல்கலைக்கழகத்தின் 6 மாணவர்களுக்கு வகுப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது.*

*இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த நவம்பர் 20ஆம் திகதி முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்துக்கு முன்பாக மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.*

*இதனையடுத்து, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் தற்காலிகமாக மூடப்பட்டது.*

*(அ)*

# இலங்கை மாணவர்களுக்கு ஜப்பானில் தொழில் பயிற்சி

*கொழும்பு, டிசெ. 05*

*இலங்கை பல்கலைக்கழகங்களில் விவசாயம் தொடர்பில் கற்கும் மாணவர்களுக்கு ஜப்பானில் உள்ள மூன்று உயர்கல்வி நிறுவனங்களில் தொழில் பயிற்சியை வழங்க ஜப்பானின் ஆசிய மனிதவள வங்கி இணங்கியுள்ளது.*

*விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.*

*விவசாயத்திற்கு மாத்திரமன்றி பெருந்தோட்ட பயிர்களை கற்கும் மாணவர்களுக்கும் இந்த பயிற்சியை வழங்குமாறு அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பயிற்சியின் போது மாதாந்த உதவித் தொகையாக ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 960 யென் அல்லது 3 இலட்சத்து 28 ஆயிரத்து 341 இலங்கை ரூபாய் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது*

*குறித்த ஒரு வருட கால பயிற்சியின்போது ஊதியம், உணவு மற்றும் தங்கும் வசதிகள் மற்றும் விமான பயணச் சீட்டுக்களை இலவசமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், ஜப்பானிய மொழியில் மேம்பட்ட பயிற்சிகளை வழங்குவதாகவும், ஜப்பானிய பண்ணைகளில் மேம்பட்ட தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதாகவும் ஜப்பானிய பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.*

*(அ)*

# எக்ஸ்ரே இயந்திரம் பழுது

*கொழும்பு, டிசெ. 05*

*கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இயங்கி வந்த ஒரேயோர் எக்ஸ்ரே இயந்திரமும் பழுதடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*


*குறித்த இயந்திரம் கடந்த வாரம் பழுதடைந்ததாக அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.*

*இரண்டரை மாதங்களுக்கு முன், பிரதான எக்ஸ்ரே இயந்திரம் பழுதாகியிருந்ததாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.*

*தற்போது பழுதடைந்துள்ள எக்ஸ்ரே இயந்திரத்தை பயன்படுத்தி, எக்ஸ்ரே பரிசோதனைகள் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 05 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 19
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அஷ்டமி




**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவு படுத்துவீர்கள். பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத உதவிகிட்டும்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**கடகம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுக் கிடைக்கும். புதிய பாதை தெரியும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் இன்று உங்களை அறியாமலேயே ஒருவித தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவு வரக்கூடும்.சகிப்புத் தன்மை தேவை.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது.வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். சகஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**விருட்சிகம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உங்களின் புதிய முயற்சியை அதிகாரி ஆதரிப்பார். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன்செயல்படுவார்கள். அதிரடிமாற்றம்உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால்பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்துநீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். தன்னம்பிக்கை பெருகும் நாள்.

**மீனம்**
சமயோசிதமாகவும். சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள் பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

# 47 ஆண்டுகளில் இல்லாதளவு சென்னையில் மழைவீழ்ச்சி!

*சென்னை, டிசெ. 05*

சென்னையில் கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத அளவு கனமழை பதிவாகியுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகின்றது.

இதன்காரணமாக சாலைகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான சாலைகளில் மரம் விழுந்ததால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில், சென்னையில் இன்று அதிகாலை வரை 340 மி. மீ. மழை பதிவாகியுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இது கடந்த 47 ஆண்டுகள் வரலாற்றில் பெய்யாத கனமழை ஆகும். இதற்கு முன்னதாக சென்னையில் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது பெய்த மழையின் அளவு 340 மி. மீ. என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பிரதமர் மோடியின் வளர்ச்சி அரசியலுக்கு கிடைத்த வெற்றி!

## அண்ணாமலை தெரிவிப்பு

*சென்னை, டிசெ. 05*

நான்கு மாநில தேர்தல் முடிவுகள் பிரதமர் நரேந்திர மோடியின் வளர்ச்சி அரசியலை மக்கள் தெரிவு செய்துள்ளனர் என்பதைப் பிரதிபலிக்கிறது என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவர் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், "நடைபெற்று முடிந்த 4 மாநிலங்களுக்கான தேர்தல்களின் முடிவுகள் தேசத்தின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, பிரதமர் நரேந்திர மோடியின் வளர்ச்சி அரசியலை மக்கள் தெரிவு செய்துள்ளனர் என்பதை பிரதிபலிக்கிறது.

மேலும், பிரிவினைவாத அரசியல் செய்யும் 'இந்தியா' கூட்டணியை மக்கள் நிராகரித்துள்ளனர். மத்திய பிரதேசத்தில் 18 ஆண்டுகள் பா. ஜ. கவின் ஆட்சி, தனது வெற்றிகரமான சமூக நல நடவடிக்கைகளை நிரூபித்துள்ளது. ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் மக்கள் காங்கிரஸ் கட்சியை அவர்களின் ஊழல் நடவடிக்கைகளுக்காக நிராகரித்துள்ளனர்.

தெலங்கானாவில் 2018இல் 6.9 சதவீதம் அளவுக்கு பெற்றிருந்த நிலையில், பாஜக வாக்கு வங்கி இப்போது 13.8 சதவீத வாக்குகளுடன் இரட்டிப்பாகியுள்ளது. 2024இல் மக்களவைத் தேர்தலில் மீண்டும் பிரதமர் மோடிதான் வெற்றி பெறுவார் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# காங்கிரஸ் முழுவீச்சில் செயல்படுவதே 5 மாநில தேர்தல் முடிவு தரும் பாடம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர்

*சென்னை, டிசெ. 05*

ராகுல் காந்தியின் கொள்கை பாதையை காங்கிரஸ் கட்சியினர் உறுதியுடன் மேற்கொள்வதன் மூலமே 2024 மக்களவை தேர்தலில் பா. ஜ. கவை தோற்கடித்து மோடி ஆட்சியை அகற்ற முடியும். அதற்காக காங்கிரஸ் கட்சியினர் முழு வீச்சில் செயல்படுவதுதான் 5 மாநில தேர்தல் தீர்ப்பு காங்கிரஸ் கட்சிக்கு தருகிற செய்தி ஆகும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்ததை விட ஏமாற்றமளிக்கிற வகையில் அமைந்திருப்பது மிகுந்த அதிர்ச்சியை தருகிறது. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் கடுமையான பரப்புரை மேற்கொண்டதை அனைவரும் அறிவார்கள். நடைபெற்ற தேர்தலில் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்துகிற வகையில் பா.ஜ.கவுக்கு எதிரான கருத்தியலை முன்வைத்ததோடு, மாநிலத் தலைவர்களை மையப்படுத்தி தான் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வியூகம் அமைந்திருந்தது.

மத்திய பிரதேசத்தில் கமல்நாத் , ராஜஸ்தானில் முதலமைச்சராக இருந்த அசோக் கெலாட், சத்தீஸ்கர் முதலமைச்சராக இருந்த பூபேஷ் பாகேல், தெலங்கானாவில் ரேவந்த் ரெட்டி ஆகியோரை முன்னிலைப்படுத்தி தான் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வியூகம் அமைந்திருந்தது. தேர்தலை எதிர்கொள்வதற்கான முழு வியூகங்களை அமைப்பதற்கு மாநில தலைமைக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட புள்ளி விபரத்தின்படி ராஜஸ்தான் மாநிலத்தில் 2018 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 39.3 சதவீதமும், 100 இடங்களும் ஆகும். தற்போது 2023 இல் 39.53 சதவீத வாக்குகளை பெற்று 69 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் பா. ஜ. க கடந்த தேர்தலைவை விட தற்போது 2.69 சதவீதம் அதிகம் பெற்று 115 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கப் போகிறது.

அதே போல மத்திய பிரதேசத்திலும் காங்கிரஸ் கட்சி கடந்த தேர்தலில் பெற்றதை விட தற்போதைய தேர்தலில் ஏறத்தாழ 0.54 சதவீத வாக்குகள் தான் குறைவாக பெற்றிருக்கிறது. ஆனால் பா.ஜ.க. கூடுதலான சதவீத வாக்குகளை பெற்று அதிக இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

சத்தீஸ்கர் மாநிலத்தை பொருத்த வரையிலும் காங்கிரஸ் கட்சியின் வாக்கு சதவீதம் 1.12 சதவீதம் தான் குறைந்திருக்கிறது. ஆனால் பா.ஜ.க. கூடுதலான சதவீத வாக்குகளை பெற்று அதிக இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. 3 மாநில சட்டமன்ற தேர்தலிலும் 2018 இல் காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்கு சதவீதத்தை ஏறத்தாழ மீண்டும் பெற்றிருந்தாலும், வெற்றிபெற்ற இடங்கள் குறைந்திருக்கிறது.

4 மாநில சட்டப்பேரவைத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி 4.91 கோடி வாக்குகளை பெற்றுள்ளது . ஆனால் பாஜக 4.8 கோடி வாக்குகள் மட்டுமே பெற்று இருக்கிறது. இந்த புள்ளி விபரத்தின் அடிப்படையில் பார்க்கிறபோது காங்கிரஸ் கட்சி தனது வாக்கு வங்கியை இழந்துவிடவில்லை. ஆனால் தேர்தலில் வெற்றிவாய்ப்பை இழந்திருக்கிறோம் அவ்வளவுதான்.

கடந்த 2003 இல் இதே மத்திய பிரதேச, ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநில சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றிபெற்று ஆட்சியை அமைத்தது. ஆனால் அடுத்த சில மாதங்களில் 2004 இல் நடைபெற்ற மக்களவை தேத்தலில் இதே மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் வெற்றிபெற்று மத்தியில் ஆட்சி அமைத்தது என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே 2024 மக்களவை தேர்தலில் பா.ஜ.க.வை நிச்சயம் தோற்கடிக்க முடியும் - என்றார்.

(ஐ)

# தமிழர் மீதான காட்டுச் சட்டங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ. 05**

**தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும் தமிழ் மக்களுக்கு எதிராக காட்டுச் சட்டங்களை பயன்படுத்துவதும் நிறுத்தப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**



வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும் தமிழ் மக்களுக்கு எதிராக காட்டுச் சட்டங்களை பயன்படுத்துவதும் தமிழர்கள் மீது ஈவிரக்கம் இல்லாத தாக்குதல்கள் சித்திரவதைகளை நடத்துவதும் பொலிஸாரின் வழமையான நடவடிக்கையாக இருக்கின்றது.

ஆகவே பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யுத்த காலத்திலேயே இனப்படுகொலையோடு சேர்ந்து செயல்பட்ட பங்காளர்களான பொலிஸார் வடக்கு-கிழக்கில் பல உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

அவர்களுக்கு கீழே செயல்படுகின்றவர்களும் புதிதாக சேர்ந்து கொள்பவர்களும் அது தமிழர்களாக இருந்தாலும் கூட அவர்களுடைய மேலதிகாரிகளின் மனநிலைக்கு உள்வாங்கப்பட்டு சாதாரண தமிழ் மக்களை மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்கின்ற வக்கிர மனம் கொண்டவர்களாக மாற்றப்படுகிறார்கள்.

ஆகவே இந்த முறைமை முற்றாக மாற்றப்படவேண்டுமாக இருந்தால் எங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலைக்கு முழுமையான சர்வதேச விசாரணையொன்று நடைபெறவேண்டும்.

இராணுவத்தினர் மட்டுமல்ல இந்த இனப்படுகொலையோடு தொடர்பட்ட பொலிஸாரும் தண்டிக்கப்படுகின்ற பொழுதுதான் பொலிஸார் மனிதர்களை நேசிக்கின்ற ஒரு சூழல் உருவாகும்-என்றார். (அ)

# பாராளுமன்றில் சமிந்த விஜேசிறியின் சிறப்புரிமை மீறல் தொடர்பில் கேள்வி

*கொழும்பு, டிசெ. 05*

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பான சகல விடயங்களையும் நீதி இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசி, அந்த வழக்கு நடவடிக்கையின் உள்ளடக்க விடயங்கள் முன்வைக்கப்பட்டன என்றும், இது சிறப்புரிமைகளை மீறும் நடவடிக்கை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வழக்கு தொடர்பான தகவல் பத்திரக் கோப்புகள் போன்றவற்றை சபையில் சமர்ப்பிப்பது, ஹன்சாட் பதிவிடுவது தடை செய்யப்பட்டது மற்றும் இது நெறிமுறையற்ற விடயம் எனவும், இது தொடர்பில் ஆராயந்து நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணி விரைவில் முடியும்

*கொழும்பு, டிசெ. 05*

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப்பணிகள் அடுத்த வருட நடுப்பகுதியில் நிறைவடையும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்த முனையத்துக்காக மூன்று மெகா கப்பல்கள் ஒரே நேரத்தில் நிறுத்தப்படும் வகையில் 1,400 மீற்றர் நீளம் கொண்ட கப்பல் இறங்குதுறை அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த முனையத்தின் அபிவிருத்திக்காக மொத்தம் 585 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்புக்கு அதிகமான கப்பல்களை ஈர்க்கும் வகையிலும் ஆசியாவின் முக்கிய துறைமுகமாக இதனை மாற்றவும் விரும்புவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (அ)

# கலாசாலையில் நாவலர் குருபூசை





*யாழ்ப்பாணம், டிசெ. 05*

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்ற ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தின விழா நேற்று திங்கட்கிழமை காலை 8:30 மணிக்கு கலாசாலை அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலைக்கு கலாசாலை அதிபர் ச. லலீசனும் இந்து மாமன்ற காப்பாளரும் விரிவுரையாளருமாகிய கு.பாலசண்முகனும் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சமய வேறுபாடின்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குறித்து தாங்கள் அறிந்ததை சபையின் முன் குறுகிய நேர



உரையாக சமர்ப்பித்தனர்.

நிகழ்வின் கருத்துரைகளை பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் ஆற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் கு பாலஷண்முகன் நிறைவுரை ஆற்றினார். நிகழ்ச்சியினை மாணவர் மன்ற தலைவர் சு. தனசீலன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் வரவேற்புரையை க.பிரசாந்தனும் நன்றியுரை ச.கஜராஜும் நிகழ்த்தினர். (அ)

# வெளிநாட்டில் விவாகரத்து இலங்கையிலும் செல்லுபடி

*கொழும்பு, டிசெ. 05*

இலங்கையில் திருமணம் செய்து கொண்ட தம்பதியினர் வெளிநாட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றிருந்தால், இலங்கை சட்டத்தின் கீழ் அந்த விவாகரத்து செல்லுபடியாகுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.


இதன்படி, வெளிநாட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்ற தம்பதிகள் மீண்டும் இலங்கையிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து பெறவேண்டும் என்ற நடைமுறையில் இருந்த சட்டத்தை மாற்றியமைத்து இவ்வாறு தீர்ப்பளித்தது.

இங்கிலாந்து நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்ற தனது விவாகரத்தை ஏற்குமாறு திருமணப் பதிவாளர் நாயகத்துக்கு உத்தரவிடக் கோரி, ஒருவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வாரம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழாம் இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் இங்கிலாந்தின் இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட லியனகே சம்பிக்க ஹரேந்திர சில்வா என்ற நபரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவில் திருமணப் பதிவாளர் நாயகம் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர் பூர்ணா செவ்



வந்தி நாகசிங்க என்பவரை 2010 ஆம் ஆண்டு இந்நாட்டில் திருமணம் செய்து கொண்டு, திருமணத்துக்குப் பிறகு இருவரும் இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கச்சென்றனர். பின்னர் அங்கு திருமணம் முறிந்து, மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பூர்ணா செவ்வந்தி நாகசிங்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மனுதாரரை விவாகரத்து செய்வது தொடர்பாக இங்கிலாந்தில் உள்ள கிங்டன் குடும்ப நல நீதிமன்றத்தில் ஏற்கனவே விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்தார். அதன்படி, கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்கை வாபஸ் பெற மனுதாரர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பின்னர் இது தொடர்பான விவாகரத்து இங்கிலாந்தில் உள்ள கிரிஸ்டல் குடும்ப நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது மற்றும் அது தொடர்பான விவாகரத்து சான்றிதழ் 2018 இல் பெறப்பட்டது.

பின்னர் மனுதாரர் 2019 இல் தாய்லாந்தின் பாங்கொக்கில் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

2021 ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் உள்ள கிங்டன் குடும்ப நீதிமன்றம் வழங்கிய விவாகரத்தை ஏற்குமாறு இந்த நாட்டின் பதிவாளர் நாயகத்தை மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் பதிவாளர் நாயகம் விவாகரத்தை மறுத்துள்ளதுடன், மனுதாரர் இந்த நாட்டிலுள்ள பொருத்தமான நீதிமன்றத்தில் விவாகரத்து பெற வேண்டுமென கூறியுள்ளார்.

பதிவாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு எதிராக விவாகரத்து வழங்குமாறு கோரி மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த ரிட் மனுவை தாக்கல் செய்தார்.

மனு மீதான விசாரணையின் முடிவில், இதுதொடர்பான முடிவை அறிவிக்கும் போது, வெளிநாட்டில் நடந்த விவாகரத்து, இந்த நாட்டிலும் செல்லுபடியாகும் விவாகரத்தாக ஏற்கப்படும் என நீதிபதிகள் குழாம் குறிப்பிட்டனர்.

விவாகரத்து சட்டத்தின் கீழ் உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும் அந்த நீதிமன்றம் இலங்கையில் அமைந்துள்ள நீதிமன்றம் மாத்திரம் அல்ல என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# டுபாய் காலநிலை மாநாட்டில் மஹேல

## அரச பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருந்தாரா என சர்ச்சை

**கொழும்பு, டிசெ. 05**
**டுபாய்க்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை அரச பிரதிநிதிகள் குழுவில் தானும் இடம்பெற்றிருந்தார் என தெரிவிக்கப்படுவதை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன நிராகரித்துள்ளார்.**



கடந்த சனிக்கிழமை டுபாயில் இடம்பெற்ற நிகழ்வில் மஹேல ஜெயவர்த்தன காணப்படும் படங்கள் வெளியாகியுள்ளன. இந்நிகழ்வை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

இது குறித்து கேள்வி எழுப்பியவேளை, இலங்கை பிரதிநிதிகள் குழுவில் ஒருவராக மஹேல ஜெயவர்த்தன கலந்துகொண்டார் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தனியாக பணம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும், தான் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் ஒரு பகுதியாக செல்லவில்லை என மஹேல தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டேன். ஆனால் இலங்கை பிரதிநிதிகள் குழுவில் நான் இடம்பெற்றிருக்கவில்லை என மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பேண்தகுதன்மைக்கான ஐக்கியநாடுகளின் தூதுவர் தான் எனவும் மஹேல ஜெயவர்த்தன கூறினார்.

இலங்கை அரசாங்கம் பரப்புரை செய்கின்ற காலநிலை நீதி தொடர்பான விடயத்திற்கு நான் ஆதரவளிக்கின்றேன் என மஹேல தெரிவித்துள்ளார்.

(அ)

# அரசியல்வாதிகள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் கலாசாரம் உருவாகவேண்டும்

## அனுரகுமார திஸநாயக்க அழைப்பு

கொழும்பு, டிசெ. 05
பஸ், ரயில் என அரசியல்வாதிகள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் புதிய அரசியல் கலாசாரத்தை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், தனிப்பட்ட பாதுகாப்புக்காக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எவரும் பொலிஸாரை பயன்படுத்தியதில்லை.

வேறு நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள் பஸ், ரயில், சைக்கிள் என மக்களுடன் இணைந்தே செல்கின்றனர். அந்த கலாசாரம் இங்கு வர வேண்டும்.

வங்குரோத்து அடைந்த நாட்டை பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் துணிவு தேசிய மக்கள் சக்திக்கு உள்ளது.

உள்நாட்டிலும் ஏனைய நாடுகளில் வாழும் இலங்கையர்களின் அறிவைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை மீட்டெடுப்போம்-என்றார். (அ)

# மின்னல் தாக்கி விவசாயி மரணம்

## கலேவெலயில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 05
கலேவெல பிரதேசத்தில் வயலில் உழுதுக்கொண்டிருந்த போது விவசாயி ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார் என கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புலாகல பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஏ.சோமதிலக என்ற 60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் தனது குடும்பத்தினருடன் வயலில் உழுதுகொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் தொலைதூரம் நோக்கி தூக்கி வீசப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

தாக்கப்பட்டவர் கலேவெல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஆசிய பசிபிக் பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு புதன்கிழமை

கொழும்பு, டிசெ. 05
பாராளுமன்ற உறுப்பினர்களிடையில் ‘வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சியை ஊக்குவித்தல்’ எனும் தொனிப் பொருளின் கீழ் உலக அமைதியை நிலைநாட்டுவதற்காக ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட சர்வதேச மாநாடு எதிர்வரும் டிசெம்பர் 06ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமைதிக்கான சர்வதேச மாநாட்டுப் பேரவையின் தலைவர், இலங்கையில் ஆறாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இடம்பெறும் இந்த மாநாட்டுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமை தாங்கவுள்ளார்.

இந்த மாநாட்டை உலகளாவிய அமைதி ஒன்றியம் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புக்களான அமைதிக்கான சர்வதேச மாநாட்டுப் பேரவை மற்றும் அமைதிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியன இலங்கை பாராளுமன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

உலகளாவிய அமைதி ஒன்றியத்தின் தலைவர் சார்ள்ஸ் யாங், சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைதி அமைப்பின் ஆசிய பசிபிக் பிராந்தியத் தலைவர் ஏக் நாத் தகால் மற்றும் உலகளாவிய அமைதி ஒன்றியத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத் தலைவர் மஸாய்சி ஹொரி மற்றும் மலேசியா, நேபாளம், இந்திய மற்றும் பங்களாதேஷ் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் சர்வதேச பிரதிநிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

(அ)

# மலையகத்தில் அடை மழை

கொழும்பு, டிசெ. 05
மலையகத்தில் பல பகுதிகளிலும் நேற்று காலை முதல் மழை பெய்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக நீர் போசன பிரதேசங்களுக்கு பதிவாகிவரும் அதிக மழை காரணமாக காஸ்ரி கெனியோன், மவுசாக்கலை, ல்கஸபான நவ லக்ஸபான, பொல்பிட்டிய மேல் கொத்மலை உள்ளிட்ட நீர்த் தேக்கங்களில் நீர் மட்டமும் உயர்ந்து வான் பாயும் அளவினை எட்டியுள்ளன.

நேற்று முன் தினம் மாலை முதல் நோட்டன் பிரிஜ் பகுதிக்கு பெய்து வரும் தொடர் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் உள்ள அனைத்து வான் கதவுகளிலும் நீர் வான் பாய்ந்து வருகின்றன.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஏனைய நீர்த் தேக்கங்களிலும் நீர் மட்டம் உயர்ந்துள்ளதனால் எந்த வேளையிலும் வான் கதவுகள் தன்னிச்சையான திறக்கப்படலாம் எனவும் அணைக்கட்டுக்கு மேலாக




வான் பாயலாம் எனவும் நீர்த் தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப் பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மண்சரிவு அபாயமிக்க பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என இடம் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை ஹற்றன் - கொழும்பு மற்றும் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியிலும் ஹட்டன் கண்டி பிரதான வீதியிலும் பல இடங்களில் மண் திட்டடுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் பல பகுதிகளில் மண்சரிவு அபாயமும் காணப்படுவதுடன் சீரற்ற கால நிலையும் பனியுடனான காலநிலையும் அடிக்கடி காணப்படுகின்றது.

(அ)

# தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் பணி புரிந்த ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணரும் வெளியேறினார்

கொழும்பு, டிசெ. 05
தெஹியத்தகண்டிய ஆதார வைத்தியசாலையில் இருந்த ஒரேயொரு சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் நாட்டை விட்டு வெளியேறியதனால் சகல சத்திர சிகிச்சைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து வைத்தியசாலையின் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்தும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

அவசர சத்திர சிகிச்சை உட்பட 50 சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை வைத்திய சாலை உட்பட அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் அனுப்பப்பட்ட போதிலும், குறித்த வைத்தியசாலைகளில் நிலவும் நெரிசல் காரணமாக நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, தெஹியத்தகண்டிய வைத்தியசாலையின் பணிப்பாளர், அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் சக்கரத்தில் சிக்குண்டவர் பலி

கொழும்பு, டிசெ. 05
அளவ்வவில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றில் பயணித்த ஒருவர் பொல்கஹவெல பிரதேசத்தில் பஸ்ஸிலிருந்து இறங்க முற்பட்டபோது பஸ்ஸின் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பொல்கஹவெல - கந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவராவார்.

இவர் காயமடைந்த நிலையில் பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்கஹவெல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# எந்த சந்தர்ப்பத்திலும் ரணிலை நாங்கள் தோற்கடிக்கமாட்டோம்

## பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 05

**எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த பெருந்தலைவராகவே ரணில் விக்ரமசிங்கவை ஆளும்கட்சியினர் பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுகின்றனர் என்றும் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

அவர்களது இந்த சதித் திட்டம் வெற்றியளிக்காது என்றும் வரவு-செலவுத் திட்டத்தை



தோற்கடித்து அரசை தவிக்கும் அவர்களது சதி முறையிற்சிக்கு மொட்டுக் கட்சி இடமளிக்காது என்றும் அவர் கூறினார். (அ)

# கொழும்பு-மும்பை இடையே இனி தினசரி விமான சேவை!

கொழும்பு, டிசெ. 05

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் கொழும்பு மற்றும் மும்பை இடையே தினசரி இரட்டை விமான சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி கொழும்பு மற்றும் மும்பைக்கு இடையில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை 50 வீதமாக அதிகரிக்கும் என விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

மும்பையிலிருந்து வரும் பயணிகள் கொழும்பில் இருந்து சிங்கப்பூர், கோலாலம்பூர், பாங்கொக், லண்டன், பிராங்போர்ட், பாரிஸ், மெல்போர்ன் மற்றும் சிட்னி போன்ற இடங்களுக்குச் செல்லவும் இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

மேலும் இது இந்தியாவுக்கு நிதி மற்றும் பொழுதுபோக்கு மூலதனத்துக்குச் செல்லும் பயணிகளின் வசதியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் தற்போது இந்தியாவில் டில்லி, பெங்களூர், ஹைதராபாத், கொச்சி, மதுரை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்கு 100 இற்கும் மேற்பட்ட விமான சேவைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# டெங்குத் தடுப்பு உதவியாளர்கள் யாழில் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யா. மாவட்டத்தில் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே குறித்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரர் ஒன்றையும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கையளித்தனர். (அ)

# பிறந்த சிசுவைக் கொலை செய்தார் மாலைதீவில் இலங்கை பெண் கைது

கொழும்பு, டிசெ. 05

மாலைதீவில் பணிபுரிந்து வந்த இலங்கைப் பெண் ஒருவர் பிறந்த சிசுவைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இரகசியமாக சிசுவை பிரசவித்து, அதனை ஒரு பைக்குள் இட்டு குப்பைக் கிடங்கில் போட்டு விட்டு சென்றுள்ளார்.

சிசுவையை குப்பைக் கிடங்கில் இருந்து மீட்டு பரிசோதித்த போது சிசு உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் விரைவான நடவடிக்கை எடுத்து, விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்றபோது குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாலைத்தீவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# நீதியமைச்சரின் கருத்துக்கு நாளை நான் பதிலளிப்பேன்

## ரிஷாத் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 05

எனது நண்பரான நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நான் சபையில் இல்லாதபோது எனது பெயரை குறிப்பிட்டு உரையாற்றியதாக சக உறுப்பினர்கள் என்னிடம் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்ட விடயங்களை நான் முழுமையாக அறியவில்லை. ஆகவே இதற்கு நான் நாளை செவ்வாய்க்கிழமை பதிலளிக்கிறேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய நீதியமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அவரது அடிப்படை உரிமை மீறல் வழக்கை குறிப்பிட்டு நீதியரசரை சபித்தார். இந்த கருத்து பாரதூரமானது.ஆகவே பாராளுமன்றத்தின் ஊடாக அவர் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்-என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ரிஷாத் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# விழிப்புலனற்ற வாக்காளர்களுக்கு தொட்டுணரக்கூடிய வாக்குச்சீட்டு!

## தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 05

தேசிய ரீதியில் நடைபெறும் அடுத்த தேர்தலில் விழிப்புலன் அற்ற வாக்காளர்களுக்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் தொட்டுணரக்கூடிய விசேட வாக்குச் சீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விசேட தேவையுடையவர்களுக்கு விசேட அடையாள அட்டை ஒன்று வழங்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இயலாமையுடைய நபர்களுக்கான சர்வதேச தினம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் இதனை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், இயலாமையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணி, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள்,சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட தேர்தல்கள் ஆணையாளர்-

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 10 வாக்களிப்பு நிலையங்களில் முன்னோடித் திட்டமாக முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் வெற்றியளித்துள்ளது. செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினரின் தேவைகள் மற்றும் இயலாமையுடைய நபர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லக்கூடிய வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் . அத்துடன் இயலாமையுடைய நபர்களுக்கு விசேட அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இயலாமையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியின் தலைவர் ரசாஞ்சலி பத்திரகே, நாட்டின் சனத்தொகையில் 8.7 சதவீதம் அதாவது கிட்டத்தட்ட 16 இலட்சம் பேர் இயலாமையுடைய நபர்களைக் கொண்ட சமூகமாகக் காணப்படுகிறது. அத்தரப்பினருக்காகக் குரல்கொடுக்க செப்டம்பர் 6 ஆம் திகதி பாராளுமன்ற ஒன்றியமொன்றை அமைக்கக் கிடைத்திருப்பது மிகப்பெரிய சாதனை என்றும் கூறினார்.

இந்த நாட்டில் பல பொது இடங்களில் வசதிகள் இல்லாததால், இயலாமையுடைய நபர்களுக்கு பஸ், ரயில் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து வசதிகள் இல்லையென்றும் சுட்டிக் காட்டினார். இவ்வாறான நபர்கள் பாரிய அளவில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுவது மற்றும் அவர்களின் கல்விக்குக் காணப்படும் தடைகள் குறித்தும் அவர் பிரஸ்தாபித்தார்.

எனவே, இயலாமையுடைய நபர்களின் உரிமைகளை சட்ட ரீதியாக அமுல்படுத்தும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அவர்களின் பிரதிநிதித்துவம் அரசியலில் இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

# தேசிய விளையாட்டுப் பேரவைக்கான புதிய உறுப்பினர்களை நியமித்த ஹரின்



கொழும்பு, டிசெ. 05

தேசிய விளையாட்டுப் பேரவை மற்றும் தேசிய விளையாட்டு தெரிவுக்குழு ஆகியவற்றுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

15 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக கலாநிதி மையா குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குழுவின் ஏனைய பிரதிநிதிகளாக ஐ.யூ.விக்ரமசூரிய, ஸ்ரீயானி குலவன்ச, ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹொட்டி, பேராசிரியர் அர்ஜூனடி சில்வா, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஆனா புஞ்சிஹேவா, பேராசிரியர் ரியர் அட்மிரல் ஷெமால் பெர்னாண்டோ உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, தேசிய விளையாட்டு தெரிவுக் குழுவின் தலைவராக ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

தெரிவுக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அர்ஜூன் பெர்னாண்டோ, மையா குணசேகர, சுரேஷ் சுப்ரமணியம், நலிந்த சம்பத் இலங்கைக்கோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய விளையாட்டு பேரவையின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க முன்னதாக பதவிவகித்தார்.

இலங்கை கிரிக்கெட் துறையில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இதன்படி, ஹரின் பெர்னாண்டோ விளையாட்டுத் துறை அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# காட்டு யானைகளின் தொல்லையால் கரும்புச் செய்கையாளர்கள் பாதிப்பு

அம்பாறை, டிசெ. 05

**அம்பாறை மாவட்டத்தில் கரும்பு செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் காட்டு யானைகளின் தொல்லையால் பாரிய நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இறக்காமம், குடுவில், மாணிக்கமடு மற்றும் தண்ணிமலை ஆகிய கிராமங்களுக்குள் இரவுவேளைகளில் உட்புகும் காட்டு யானைகள் குடியிருப்புகளுக்கும் உடமைகளுக்கும் கரும்பு பயிர்களுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

காட்டு யானைகள் கூட்டமாக வந்து கல்மடுப் பகுதியிலுள்ள கரும்புத் தோட்டத்திற்குள்ளும் நுழைந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் பெரும்போக வேளாண்மைச் செய்கை நிறைவடைந்த நிலையில் விவசாயிகள் காட்டு யானைகளின் நடமாட்டத்தை இரவு பகலாக மிகுந்த கவனத்துடன் அவதானித்தும் வருகின்றனர். (அ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

அம்பாறை, டிசெ. 05

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற எம்.எச்.எம். நீதிபதி ஹம்ஸா உத்தரவிட்டார்.

அட்டாளைச்சேனை பிரதான வீதியில் 120 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்திற்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் நபரை கைது செய்து நேற்று திங்கள்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே சந்தேக நபருக்கு இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உலக எயிட்ஸ் தினத்தையொட்டி வைத்தியசாலையில் மரநடுகை



அம்பாறை, டிசெ. 05

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் எம்.பி.வாஜித் தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் மரநடுகை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)





# சாரண ஆசிரியர்களுக்கு இரண்டு நாள்கள் பயிற்சி

அம்பாறை, டிசெ. 05

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாராணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு இரண்டு பயிற்சி நெறி அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் நேற்று திங்கள்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் இரண்டு நாள் நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறைக்கு திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய கல்வி வலயங்கலிருந்து சுமார் ஐம்பது ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை பெறவுள்ளனர்.

சாரணியத்துறையில் உயர் பயிற்சிகளை பெற்ற வாளவாளர்களைக் கொண்ட பயிற்சி குழுவினரால் இப்பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளதாக பயிற்சிக் குழு தலைவரும், மாவட்ட சாரண ஆலோசாகருமான யூ.எல்.எம்.ஹாசிம் தெரிவித்தார். (அ)



# காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக திருமலையில் உண்ணாவிரதம்!

திருமலை, டிசெ. 05

திருகோணமலை,வெல்கம் விகாரை வனப்பகுதியில் பாரிய அளவிலான காணிகள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அப்பகுதி மக்கள் கடந்த 5 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும் இது வரை எந்த ஒரு அரச அதிகாரிகளும் இது தொடர்பில் கவனம் செலுத்தாத நிலையில் திருகோணமலை - அனுராதபுரம் பிரதான வீதியினை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த உப்புவெளி பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடுவதற்கு உதவி செய்வதாக உறுதியளித்ததை அடுத்து அவ்வீதியூடான போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அப்பகுதி மக்களால் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிலைபெறான அபிவிருத்தி முன்வைப்பில் கல்முனை கார்மேல் பற்றிமா சாதனை!

காரைதீவு, டிசெ. 05

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் கிழக்கு மாகாண இரு மொழிக்கல்வி பாடசாலைகளிடையே தரம் 6-9 வரையான வகுப்பு மாணவரிடையே நடத்தப்பட்ட நிறைபேறான அபிவிருத்தி தொடர்பான முன்வைப்பு மாகாண மட்ட போட்டியில் கல்முனை கார்மேல் பற்றமா கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளது.

இம் மாகாண மட்ட போட்டி மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் வழிகாட்டலில், இம் முன்வைப்பு போட்டியில் சிறப்பான முன்வைப்பு களை முன்வைத்தனர்.

தரம் 6 சார்பாக ரி. மிருஷானன், தரம் ஏழு சார்பாக சு. தவேஸ்ஹர், தரம் எட்டு சார்பாக கே பீஷ்மன், ஏ எஸ் முகமது சுலைம், தரம் ஒன்பது சார்பாக ஹியூமன் றொட்கர் ஆகிய மாணவர்கள் பங்கு பற்றினர்.

கிழக்கு மாகாண மட்ட போட்டியில் முதல் இடத்தை மட்டக்களப்பு புனிதமைக்கேல் கல்லூரியும் இரண்டாம் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும் மூன்றாம் இடத்தை மட்டக்களப்பு சிசிலியா மகளிர் பாடசாலையும் பெற்றுக் கொண்டது.

கல்முனை மாவட்டமட்ட போட்டியிலே கல்முனை கார்மேல் பற்றிமா அணி முதல் இடத்தை பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவாக இருந்தமை தெரிந்ததே.

தேசிய மட்ட போட்டி நாளை கொழும்பில் செல்வத்தை பத்தரமுல்லயில் நடைபெறும். இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் இதில் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவன் மரணம்; காப்பாளரின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 05

நன்னடத்தை பாடசாலையில் சிறுவன் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் காப்பாளருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று இன்றைய தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மரணமடைந்த சிறுவனின் தந்தை முன்னிலையாகியிருந்தார். பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு மேற்பார்வையாளரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# அடுத்த 48 மணி நேரத்தில் இஸ்ரேலில் ஆட்சி கவிழும்

தெஹ்ரான், டிசெ. 05

**அல்-அக்ஸா நடவடிக்கை போன்ற மற்றொரு இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் அடுத்த 48 மணி நேரத்தில் இஸ்ரேலிய ஆட்சி கவிழும் என்று ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையின் தலைமை தளபதி மேஜர் ஜெனரல் ஹொசைன் சலாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



“48 மணி நேரத்தில் உலக புவியியல் அரசியலில் இருந்து இஸ்ரேல் அகற்றப்படும்” என்றும் மேஜர் ஜெனரல் சலாமி கூறியுள்ளதாக ஏ.என்.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் நடத்திய திடீர் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் ஒரு வேதனையான சூழ்நிலையில் இருப்பதாக சலாமி சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனிடையே, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையின் தலைவர், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராக புதுப்பிக்கப்பட்ட போர் அச்சுறுத்தலையும் வெளியிட்டுள்ளார்.

ஈரான் இன்டர்நேஷனல் அறிக்கையின்படி, “அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இஸ்லாமிய குடியரசின் மகத்துவத்திற்கு சவால் விடும் எவருக்கும் எதிராக நாங்கள் போராடுகிறோம்” என்று அவர் கடந்த வியாழக்கிழமை கூறியுள்ளார்.

ஈரான் நிதி ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் ஹமாஸுக்கு நீண்டகால ஆதரவாளராக இருந்து வருகிறது.

ஒக்ரோபர் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போரின் தொடக்கத்திலிருந்து, ஈரான் அதன் தலைவர்கள் மற்றும் தளபதிகளின் தூண்டுதலுக்கு அப்பால் நேரடியாக மோதலில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகிறது.

அத்துடன், இஸ்ரேலுடனான உறவை துண்டிக்குமாறு முஸ்லிம் நாடுகளையும் ஈரான் வலியுறுத்தி வருகின்றது.

கடந்த மாதம், ஈரானின் அரச தலைவர் அலி கமேனி, இஸ்ரேலுடன் அரசியல் உறவுகளைக் கொண்டுள்ள முஸ்லிம் நாடுகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்புகளை குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## புகலிடக் கோரிக்கையாளர் ருவாண்டாவுக்கு; மீண்டும் செயற்படுத்த பிரித்தானியா திட்டம்

லண்டன், டிசெ. 05



புகலிடக் கோரிக்கையாளர்களை ஆபிரிக்க நாட்டிற்கு அனுப்புவதற்கான திட்டத்தை மீளமைத்து புதிய ஒப்பந்தத்தை மேற்கொள்ள பிரிட்டிஷ் வழக்கறிஞர்கள் ருவாண்டா நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்திற்கு எதிரான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, அடிகனை புகாததாக மாற்றும் ரிஷி சுனக்கின் குறிக்கோளின் ஒரு பகுதியாக, உள்துறைச் செயலாளர் ஜேம்ஸ், ருவாண்டாவுடன் ஒரு ஒப்பந்தத்தை முடிப்பதற்கு தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

ருவாண்டாவில் உள்ள சட்ட அமைப்பு குறித்த கவலைகளை நிவர்த்தி செய்ய பிரித்தானிய அரசாங்கம் வழக்கறிஞர்களை அனுபபும் யோசனையை உள்துறை அலுவலகம் மிகக் கவனமாக கவனித்து வருவதாக அமைச்சர் லூசி ப்ரேசர் கூறினார்.

ருவாண்டா நீதிபதிகளுக்கு ஆலோசனை வழங்க பிரிட்டிஷ் வழக்கறிஞர்கள் அனுப்பப்படலாம் என டெய்லி டெலிகிராப் இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டால், இந்த வாரத்தில் ஒப்பந்தம் கைசேதப்படும் என்றும் அதன்பின்னர் பிரிட்டனுக்கு வரும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஆப்பிரிக்க தேசம் பாதுகாப்பான இடம் என பிரித்தானிய பாராளுமன்றில் வலியுறுத்த முடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# பிரித்தானியாவில் கடும் பனிப்பொழிவு

## கடும் நெருக்கடியில் மக்கள்

லண்டன், டிசெ. 05

பிரித்தானியாவில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ள நிலையில், வாகனங்களில் சிக்கியுள்ளவர்களை மீட்கவும், கும்பிரியாவில் உள்ள 2,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கவும் மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 சென்டிமீற்றர் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது, இதனால் மக்கள் கார்களில் சிக்கி, தற்காலிக தங்குமிடங்களில் இரவைக் கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று ஞாயிறு மாலை முதல் பனி மற்றும் பனிப் பொழிவுக்கான எச்சரிக்கைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

வடக்கு இங்கிலாந்து, மிட்லாண்ட்ஸ் மற்றும் வடக்கு வேல்ஸ் ஆகிய பகுதிகளில் பனிப்பொழிவுக்கான வானிலை அலுவலக மஞ்சள் எச்சரிக்கை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஐந்து மணி முதல் திங்கள் மதியம் வரை விடுத்துள்ளது.

இதன் பொருள் கடினமான பயண நிலைமைகள் இருக்கலாம், அத்துடன் சாலைகள் மற்றும் நடைபாதைகளில் பனிக்கட்டி திட்டுகள் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஸ்காட்லாந்தில், பனி மற்றும் பனிக்கான மஞ்சள் எச்சரிக்கை ஒரே நேரத்தில் இருக்கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை, தெற்கு இங்கிலாந்து மற்றும் தென்கிழக்கு வேல்ஸ் பகுதிகளில் கனமழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவு முதல் வெள்ளத்தில் மூழ்கும் வீடுகள், வணிகங்கள் மற்றும் பயணத் தடைகள் ஏற்படுவதற்கான மஞ்சள் எச்சரிக்கையை வானிலை அலுவலகம் விடுத்துள்ளது.

கும்பிரியாவில், சனிக்கிழமை மாலை கடும் பனியால் சுமார் 7,000 வீடுகள் மற்றும் வணிகங்கள் மின்சாரத்தை இழந்தது. வீதிகள் பயணிக்க முடியாததாக மாறியது.

இரவைக் கழிக்க சூடான இடங்களைத் தேட சாரதிகள் தங்கள் வாகனங்களை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்நிலையில், தெற்கு கும்பிரியாவில் 20 முதல் 30 சென்றிமீற்றர் பனிப்பொழிவு இருக்கும் என வானிலை ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். (அ)

# அமெரிக்கப் போர் கப்பல் மீது செங்கடலில் வைத்து தாக்குதல்

## பென்டகன் உறுதிப்படுத்தியது

நியூயோர்க், டிசெ. 05

நடந்துகொண்டிருக்கும் இஸ்ரேல்-ஹமாஸ் போருக்கு மத்தியில், மத்திய கிழக்கில் கடல்சார் பதற்றத்தை அதிகரிக்கும் வகையில், செங்கடலில் அமெரிக்க போர்க்கப்பல் ஒன்றும் பல வணிகக் கப்பல்களும் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பென்டகன் அறிக்கையை மேற்கோள் காட்டி நியூயோர்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

மோதலில் சிக்கிய பகுதி வழியாக வணிகக் கப்பலை அழைத்துச் செல்லும் போது, ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை இடைமறித்து தாக்குவதற்கு முன்னர் அமெரிக்க போர் கப்பல் தாக்குதலுக்கு உள்ளானதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

அமெரிக்க போர்க்கப்பலுக்கு சேதம் ஏற்பட்டதா என்பது உறுதியாகத் தெரியவில்லை. எனினும், ஒரு வணிகக் கப்பலாவது தாக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இது இஸ்ரேலிய கப்பல் அதிபர் ராமி உங்கரின் மகன் டேனி உங்கரின் உரிமையின் கீழ் ஒரு பிரித்தானியா நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல் ஆகும்.

இராணுவத் துப்பாக்கிச் சூட்டின் மூலத்தை அதிகாரிகள் குறிப்பிடவில்லை.

எனினும், யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் காஸாவில் இஸ்ரேலின் தரைவழி ஊடுருவலுக்கு பதிலளிக்கும் விதமாக செங்கடலில் கப்பல்களை குறிவைக்கும் தங்கள் திட்டத்தை அறிவித்துள்ளனர்.

ஃபாக்ஸ் நியூஸ் படி, அமெரிக்க கடற்படை கப்பல் முன்னதாக கிளர்ச்சிக் குழுவுடன் மோதலில் ஈடுபட்டது, யேமனில் இருந்து ஏவப்பட்ட ஆளில்லா விமானத்தை தாக்கி அழித்தது.

கடந்த வார தாக்குதலின் போது, கப்பல் பாப் எல்-மண்டேப் ஜலசந்திக்கு அருகில் சென்று கொண்டிருந்தது, இதன் போது கப்பலுக்கும் அதன் குழுவினருக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை.

சமீபத்திய தாக்குதலுக்கு முன்பு, யுஎஸ்எஸ் கார்னி யேமனில் இருந்து ஏவப்பட்ட 15 ட்ரோன்கள் மற்றும் நான்கு கப்பல் ஏவுகணைகளை செங்கடலில் வெற்றிகரமாக இடைமறித்தது.

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்கள் பற்றிய கூடுதல் விவரங்கள் எதுவும் அமெரிக்க பாதுகாப்புத் துறை அல்லது பிரிட்டிஷ் இராணுவத்தால் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் பஸ் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு

இஸ்லாமாபாத், டிசெ. 05

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள சிலாஸ் நகருக்கு அருகே பஸ் ஒன்றின் மீது துப்பாக்கி ஏந்திய கும்பல் தாக்கியதில் எட்டு பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் மேலும் 15 பேர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், பஸ்ஸுக்குள் நுழைந்த ஆயுததாரிகள் பயணிகளை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

துப்பாக்கிச்சூடு நடத்தியதற்கான காரணம் வெளியிடப்படவில்லை எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட மலையக தமிழர்கள் மீண்டும் நாடு திரும்பவேண்டும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தல்



கொழும்பு, டிசெ. 05

**சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இருந்து பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட இந்திய வம்சாவளி மலை யகத் தமிழர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் என தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

"சிறிமா - சாஸ்திரி ஒப்பந் தத்தின் உள்ள விடயங்களை முழுமையாக அமுல்படுத்துவ தில் இந்திய அரசு தவறிழைத்து விட்டதாக" சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்கும் விதமாகவே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இழைக்கப்பட்டுள்ள வரலாற்றுத் தவறை சரி செய்வ தற்கு தமக்குள்ள பொறுப்பை இலங்கை மற்றும் இந்திய அரசு கள் நிறைவேற்றவேண்டும்.

இலங்கையில் வாழ்ந்த இந் திய வம்சாவளி தமிழர்கள் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஊடாக பலவந்தமாக நாடு கடத்தப்பட்டனர். இவ்வாறு சென்றவர்களில் ஒரு தரப்புக்கு இன்னும் குடியுரிமை வழங்கப் படாமல் இருப்பது கவலைய ளிக்கின்றது.

இதனால் அவர்களின் அடிப் படை உரிமைகள் மீறப்படுகின் றன. கடும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே எமது மக்களுக்கு இலங்கையில் குடியுரிமையை பெற்றுக்கொடுத்தோம். இந்த வரலாற்று தவறை சீர்செய்வதற் காக ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

எமது மக்களுக்கு நீதி மற் றும் நியாயத்தை நிலைநாட்டு வதற்கான நல்லிணக்க பொறி முறை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், 10 பேர்ச்சஸ் காணி உரிமையும் வழங்கப்பட்டு வரு கின்றது. இவை போதுமானவை அல்ல. பலவந்தமாக நாடு கடத் தப்பட்டுள்ள மக்கள் இலங்கை திரும்ப வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்-என் றார்.

(அ)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், டிசெ. 05

சர்வதேச மாற்றுத்திறனாளி கள் தினத்தினை முன்னிட்டு, புலர் அறக்கட்டளையின் ஏற் பாட்டில்,யாழ்ப்பாணம் வலி. மேற்கு பிரதேச சபை மண்டபத் தில் சர்வதேச மாற்றுத்திறனாளி கள் தினம் நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி.கவிதா உதயகுமார், வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய அதிகாரி சி.செந்தூரன், ஓய்வுநிலை பெறதேனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்தியர் தி.ஆனந்தமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாற்று திறனா ளிகளுக்கு, புலர் அறக்கட்டளை யின் வெளிநாட்டு, உள்நாட்டு கருணை உள்ளம் கொண்ட நன் கொடையாளர்களின் உதவியு டன் கொள்வனவு செய்யப்பட்ட நுளம்பு வலைகள், போர்வை கள், மழைக் கவசங்கள் என்பன வழங்கப்பட்டன.

(அ)

# மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு கிளிநொச்சியில் முன்னெடுப்பு!



கிளிநொச்சி, டிசெ. 05

உணவுப்பாதுகாப்பு திட் டத்தை மேம்படுத்தும் நோக்கு டன் 50000 மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புது முறிப்பு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு இவ்வாறு மேலும் 50000 மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு கடற்றொழில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில் நடைபெற்றது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போசனையை உறுதி செய்யவும், கிராமிய மக்களின் வாழ்வாதா ரத்தை வளப்படுத்தும் சமூக மட்ட அமைப்புக்களுடன் இணைந்ததான மீன் குஞ்சுகளை வைப்பிலிடும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமானது.

புதுமுறிப்பு மீன் குஞ்சு உற் பத்தி நிலையத்திற்கு 150000 மீன் குஞ்சுகள் விடப்பட்டன. அதற்கு மேலதிகமாக நேற்று மேலும் 50000 மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவி ருத்தி அதிகாரசபை உத்தியோ கத்தர்கள், மீனவர்கள் என பல ரும் கலந்து கொண்டனர். (அ)

# சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வு நடை பவனி

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்வ தனை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம் பாட்டு விழிப்புணர்வை ஏற்ப டுத்தும் வகையிலான நடை பவனி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற் றது.

இணைந்த சுகநல விஞ்ஞா னங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அல கின் தலைவர் கலாநிதி சி. சபா ஆனந்த் மற்றும் விரிவுரையா ளர்கள் கூட்டாகக் கொடிய சைத்து ஆரம்பித்து வைத்த இந்த நடை பவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே. எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளை யாட்டு மைதானத்தில் நிறை வடைந்தது.

இந்த நிகழ்வில் விளை யாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரை யாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண் டனர்.

(அ)






# முல்லைத்தீவு இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

முல்லைத்தீவு, டிசெ. 05

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் அனு சரணையுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்து சமய அறநெறிப் பாடலை ஆசி ரியர்களுக்கான அடிப்படைத் தலைமைத்துவப் பயிற்சி கடந்த 2ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபர். அ.உமாமகேஸ் வரன் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியில் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள அறநெ றிப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 100 அறநெறி ஆசிரியர் கள் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவானந்தம் மோகனராசா வர வேற்புரையினை நிகழ்த்தினார்.



இந் நிகழ்வில் கல்வி அமைச் சின் ஓய்வு நிலை மேலதிக செய லாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா ,மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) சி. குணபாலன், பிரதம கணக் காளர் ம. செல்வரட்ணம் மற் றும் சைவப்புலவர், பாலன் சுதாகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந் நிகழ்வில் கலாசார உத்தி யோகத்தர்கள், மாவட்ட செய லக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் பங்கு பற்றிய ஆசிரியர்களிற்கு சான்றி தழ்களும் தலைமைத்துவத்து டன் தொடர்புடைய நூல்க ளும் வழங்கப்பட்டன. (அ)

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு மார்ச் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 05

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தை இழிவுபடுத் தும் வகையில் கருத்து வெளி யிட்ட குற்றச்சாட்டில் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு கொழும் பில் இடம்பெற்ற இந்த ஊடக சந்திப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரர் பின்னர் பிணை யில் விடுவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

(அ)

## தமிழ் இளைஞர்...

வினோ நோகராதலிங்கம் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர்,சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நறுவிலிக்குளம் பிரதேசத்தில் மன்னார் மாவட்டத்திற்கான பொது மைதானத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வெவ்வேறு காரணங்களுக்கு இடையில் நிறுத்தப்பட்டு இன்று வரை அந்த பணிகள் நிறைவு பெறவில்லை.

ஏறக்குறைய 50 சதவீத நிதி ஒதுக்கு கைகளுக்கன வேலைத்திட்டங்கள் நடந்தேறியுள்ளன. 2023 ஆம் ஆண்டுக்குள் மைதானப்பணிகள் பூர்த்தியடையும் என்று அமைச்சாலும் அதிகாரிகளினாலும் உறுதி கூறப்பட்டாலும் பூர்த்தியடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதான பணிகள் 9 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் பூர்த்தியடையவில்லை. மத்திய அரசிடமிருந்து மாகாண சபைக்கு அந்த மைதானம் இன்னும் கையளிக்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் இந்த மைதானம் எப்போது திறக்கப்படும் எனக் கேட்டேன்.

2015 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழா அந்த மைதானத்தில்தான் நடக்கும் என்றார்.ஆனால் இன்றுவரை மைதான வேலைகளே பூர்த்தி செய்யப்படவில்லை.

வவுனியா மாவட்டத்திலும் இதே போன்றே ஓமந்தையில் இருக்கின்ற பொது மைதானபணிகள் ஏறக்குறைய பூர்த்தியாகி விட்டது. ஆனால் மின்சார இணைப்பு இன்னும் வழங்கப்படவில்லை.

அதனால் வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அந்த மைதானம் இன்னும் கையளிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக இந்த மைதானங்களை வீரர்களிடம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொறுப்புக்கொடுக்கின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

முல்லைத்தீவில மாவட்டத்திற்குரிய மைதானம் இல்லை. ஒரு மைதானத்திற்குரிய காணியை இனம் காண்பதற்கு எல்லோருமே தடையாக இருந்துள்ளார்கள்.

3 இடங்களில் காணி பார்த்தார்கள் ஆனால் ஒரு மைதானத்தை அமைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஒவ்வொரு காரணம் கூறி காலம் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்குள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுக்களில் பங்கேற்கும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

அண்மையில் முல்லைத்தீவு முள்ளியவளையை சேர்ந்த 72 வயதான அகிலத்திருநாயகி என்ற வீராங்கனை பிலிப்பைன்ஸில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் இரு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

வன்னியில் 72 வயதிலும் சாதிக்கக்கூடிய வீர, வீராங்கனைகள் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் இளைஞர், யுவதிகளுக்கு விளையாட்டுக்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் பட்சத்தில் தேசிய, சர்வதேச மட்டத்தில் பிரகாசிப்பார்கள். அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொடுங்கள்.

வடக்கு மாகாணத்தில் இன்று இளைஞர்கள் போதைப் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். அவர்கள் வேறு திசைக்கு சென்று கொண்டிருக்கின்றனர்.

தற்கொலை செய்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள் கூட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இளைஞர்களுக்குரிய வாய்ப்புக்கள்,வசதிகள் மறுக்கப்பட்டதாலேயே ஆயுதப்போராட்டம் உருவானது இளைஞர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் அங்கு இல்லை.

போதைப்பொருள் புழக்கத்திற்கு அங்கு பொலிஸார் உடந்தையாக உள்ளனர். போதைப்பொருள் விற்போர், வாங்குவோரை பொலிஸாருக்கு தெரியும்.

பாவனையாளரை பொலிஸாருக்கு தெரியும் .ஆனால் யுத்தத்தில் எவ்வாறு இளைஞர்கள் கொல்லப்பட்டார்களோ அதேபோன்று இளைஞர்கள் போதைப் பொருள் பாவனை மூலமும் அழிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது -என்றார். (அ)

## பொன்னம்பலம்...

இனவாதத்தையே தூண்டுகின்றார். அவரின் தந்தையான குமார் பொன்னம்பலம் முற்போக்குவாதி -எமது நண்பர் அவர். ஆனால், அவரின் தந்தையான ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஓர் இனவாதி.

1950களில் கம்பளையில் கூட்டமொன்றை நடத்தி, சிங்கள மக்களின் மனங்கள் புண்படும் வகையில் கருத்து வெளியிட்டார். சிங்கள சமூகம் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது.

மலையக தமிழர்களின் குடியுரிமையை பறிக்கும் சட்டமூலத்துக்கு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆதரவு வழங்கினார். அமைச்சு பதவி இருக்கும்போது அந்த முடிவு நல்ல முடிவாக இருந்தது. ஏனைய நேரங்களில் இனவாதம் கதைத்தனர்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு நான் செய்த சேவையை விட 10 வீதம்கூட வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் எம்.பிக்கள் செய்திருக்க மாட்டார்கள். வடக்கு, கிழக்கு மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர்-என்றார். (அ)

## தன்னைக்...

பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இந்த நாட்டின் நீதி அமைச்சராக இருப்பதற்கு வெட்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் கூறுகின்றார்.

மட்டக்களப்பிலுள்ள விகாராதிபதி தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுகின்றார் நான் என்ன செய்வது என்று கூறினார். அவ்வாறான ஒருவரை கைது செய்ய நீதி அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றதா என நான் அவரிடம் கேட்டேன்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்யுமாறு தமிழ் டயஸ்போராக்கள் ஒப்பந்தம் ஒன்றை வழங்கியிருந்தார்கள். குறித்த ஒப்பந்தம் 20 இலட்சம் ரூபாய். வடக்கிலுள்ள ஐந்து இளைஞர்கள் அவரை கொலை செய்ய சென்றபோது எமது இராணுவமும் புலனாய்வு பிரிவும் சிறந்த முறையில் செயற்பட்டதன் காரணமாக அந்த கொலையை தவிர்க்க முடிந்தது.

அவரை காப்பாற்றிய பின்னர் அவரை கொலை செய்வதற்கு வந்த குறித்த 5 பேர் மீதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவரைக் கொலை செய்ய வருபவர்களுக்கு மாத்திரம் பயங்கவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், மற்றவர்களை கொலை செய்த கொலையாளிகளைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்து தண்டனை வழங்க வேண்டாம் என்று கூறுகின்றார்.

சுமந்திரன் அவர்களே நீங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்ப்பவர் என்றால் உங்களை கொலை செய்ய வந்த ஐவரையும் விடுதலை செய்யுமாறு நீங்களே கூறுங்கள்-என்றார். (அ)

## யாழில்...

டதுடன் இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 110 நோயாளிகளும், ஒக்டோபர் மாதத்தில் 118 நோயாளிகளும் நவம்பர் மாதத்தில் 427 நோயாளிகளும் டிசெம்பர் மாதத்தின் முதல் மூன்று நாட்களில் 82 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயின் பரம்பல் சடுதியாக அதிகரிக்கும் இந்த சூழ்நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக துரிதப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களில் அவசர டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் நேற்று இடம்பெற்றன. இதன் அடுத்த கட்டமாக கிராமிய மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டங்களை உடனடியாக நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உடனடியாக சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். வீடுகளில் பொதுமக்கள் தமது வீடுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிக்க வேண்டும். வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நீரேந்தும் கொள்கலன்களான சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ஐஸ்கிறீம் கப், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள், தண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும்.

தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் பொது மக்கள் அனைவரும் டெங்குநோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (அ)

## உணவு பொருள்...

குறைவடையக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் முன்னதாக தெரிவித்திருந்தது.

அத்துடன், உலகளாவிய கடன் வழங்குநர்கள் 3 பில்லியன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாம் தவணையை வழங்குவதற்கு இதுவரை ஒப்புதல் வழங்கவில்லை.

இந்த நிலையில், உணவு பொருட்கள் மீதான இறக்குமதி வரி நீடிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தயிர் மற்றும் பால் பொருட்கள் மீதான இறக்குமதி வரி கிலோ கிராம் ஒன்றுக்கு 2,000 ரூபாவினால் நீடிக்கப்பட்டுள்ளது.

வெண்ணெய் மீதான இறக்குமதி வரி கிலோ கிராம் ஒன்றுக்கு 1500 ரூபாவினாலும், பெரிய வெங்காயம் 10 ரூபாவினாலும் பேரிச்சம்பழம், அப்பிள் மற்றும் ஒரஞ்சு கிலோ கிராம் ஒன்றுக்கான இறக்குமதி வரி 600 ரூபாவினாலும் நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

## வாள்வெட்டு...

வந்த இளைஞர் மீது சரமாரியாக வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த 26 வயதான இளைஞர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வாள்வெட்டு குழு மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் சிலர் தெல்லிப்பழை பகுதியை நோக்கி பயணித்துள்ளனர்.

இதன்போது ஹைஏஸ் ரக வானில் வந்த வாள்வெட்டு குழுவினரை கண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஏனையவர்கள் தப்பித்து செல்ல ஒருவர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ் நிலையம் முன்பாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வாள்வெட்டு குழுவை துரத்திச் சென்றபோதும் ஹைஏஸ் வானில் குறித்த குழு தப்பிச் சென்றுள்ளது.

சந்தேகநபர்களை கைது செய்யும் நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

வாள்வெட்டு குழுவிற்குள் ஏற்பட்ட உட்பூசல் காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த வாள்வெட்டு குழுவே இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-02)

## நாகபட்டினம்...

அமைச்சர் பந்துல குணவர்த்தன, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருடன் இந்தியன் பெற்றோலிய நிறுவனத்தின் செயல்பாட்டுத் தலைவர் மற்றும் இந்திய பெற்றோலிய அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது உள்நாட்டு ரயில்வே பாதைக்கு அருகாமையில் குழாய் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டது. இந்த செயல் திட்டத்தின் ஊடாக பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எரிபொருள் விலையைக் குறைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## நாட்டை...

கொண்டுவருவதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு சிங்களவர்களுடன் யுத்தம் செய்யும்,இந்த நாட்டை பிளவுபடுத்தும் நோக்கோ இருக்கவில்லை. ஆகவே, சுமந்திரன் போன்றோருக்கு பாராளுமன்றத்தினுள் இனவாதத்தை தூண்டும் வகையில் உரையாற்றுவதற்கு இடமளிக்க வேண்டாம்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனவாதத்தை தூண்டும் வகையிலான கருத்துகளை சபையில் முன்வைத்து வருகின்றார்.

தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்கும் எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.தமிழ் மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆனால, அது அவர்களின் தேவைப்பாடாவும் உள்ளது.ஆனால், தமிழ் அரசியல் வாதிகள் சிலர் அவர்களின் சுயலாபம் மற்றும் தேர்தல் வாக்குகளை கவரும் நோக்கிலேயே தமிழ் மக்களை காரணம் காட்டி சமாதானத்தை சீர்குலைக்கின்றனர்.-என்றார். (அ)

## பருத்தித்துறை...

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்படவிருந்தது. இதன்போது, மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரும் நீதிமன்றத்துக்கு வந்து, பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தார்.

இதன்போது, அவர் வைத்திருந்த திறப்பு ஒன்று கீழே விழுந்து அதிக சத்தம் எழுப்பியுள்ளது. அருகில் நின்ற நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் அங்கு சென்று, குனிந்து திறப்பை எடுக்க முற்பட்டபோது, மது வாடை வீசியது.

குறிப்பிட்ட நபரை அழைத்து விசாரித்தபோது, அவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும், நீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்னதாக மதுபானம் அருந்தியதும் தெரிய வந்தது.

குறித்த நபரை கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். சந்தேக நபரை இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சந்தேக நபருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# வட்டுக்கோட்டை இளைஞன் உயிரிழப்பு; அடையாள அணிவகுப்பு திகதி மாற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 05

**பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த வட்டுக்கோட்டை இளைஞனின் வழக்கு விசாரணையின் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 08ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளன நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணை யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது , கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

கடந்த வழக்கு தவணையில், நேற்று அடையாள அணிவகுப்பு திகதியிடப்பட்டது. அந்நிலையில் , வழக்கின் பிரதான சாட்சியமான உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மன்றில் சமூகமளிக்காத நிலையில், அடையாள அணிவகுப்புக்கு 08 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன் போது சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் , அடையாள அணிவகுப்பு சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்தும் போது சந்தேகநபர்களுடன் முன்னிலைப்படுத்தப்படும் ஏனைய நபர்கள் சந்தேக நபர்களின் தோற்றத்தை ஒத்தவர்களாவும், பொலிஸ் உத்தியோகத்தர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் மெகா கூட்டணி ஜனவரியில் உதயம்

கொழும்பு, டிசெ. 05

2024 தேர்தல் வருடம் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமது பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை ஜனவரி மாதமளவில் வெளிப்படுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் 20 அரசியல் கட்சிகளும் சிவில் மற்றும் வெகுஜன அமைப்புகளும் அங்கம் வகிக்கவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையை ஏற்கும் தரப்புகள் மாத்திரமே கூட்டணியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பள்ளிமுனை மைதானத்தில் மோதல்

மன்னார், டிசெ. 05

மன்னார் - பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த 2 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்ட லீக் ஏற்பாடு செய்த மன்னார் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று நேற்று முன் தினம் இடம்பெற்றிருந்தது.

இதன்போதே குறித்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிரிக்கெட் ஊழல் பற்றி பேசுவதால் எனக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை!



ரொஷான் ரணசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 05

விளையாட்டுத்துறை அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு தமக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

தமக்கு உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்குவதற்கு மத்தியஸ்தம் செய்யுமாறு பாராளுமன்றத்தில் நேற்று சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆளும் தரப்பின் பிரதம அமைப்பாளருடன் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்குவதற்கு முயற்சித்தபோதிலும் அது தோல்வியுற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தில் தம்மை பேசவிடாமல் தடுப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது எனவும் தமக்கு உரையாற்றுவதற்கு நேரம் வழங்குமாறும் சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை கிரிக்கெட்டின் ஊழல் பற்றி பேசுவதால் தமக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நேரம் வழங்குவதாக தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவுக்கு உரையாற்ற ஆளும் தரப்பில் நேரம் ஒதுக்கவில்லையாயின், எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து நேரத்தை ஒதுக்குவதற்கு தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதேவேளை, தமக்கு ஒதுக்கப்பட்ட பத்து நிமிடங்களை பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவுக்கு வழங்குவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

# நாடு முழுவதும் ஊழல், மோசடி!

சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 05

நாடு முழுவதும் ஊழல், மோசடி, திருட்டு, வீண் விரயம் நடைபெறுவதாகவும், ஊழல் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் வங்குரோத்து நாட்டைக் கூட சீரழிக்கும் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிழலில் இருந்து அமுல்படுத்தப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில தலைவர்கள் கூட்டங்களுக்கு வந்து ஊழல் பேரங்கள் பற்றி முறையிட்டு, ஆட்சிக்கு வந்ததும் தண்டிப்போம் என்று கூறினர், ஆனால், எதிர்க்கட்சியில் இருந்து வந்த ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டை வங்குரோத்து செய்த ராஜபக்ச குடும்பத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அவர்களால் என்ன பெற முடிந்தது.

நாட்டை திவாலாக்கி அடிப்படை உரிமைகளை மீறியதாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதிகாரம் பெறுவதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி கோப்புகளை காட்டி போலி நிகழ்ச்சிகளை நடத்துவதில்லை. எனவே, இந்த பொய்யை நம்பி ஏமாற வேண்டாம்.

உண்மையைச் சொல்வதென்றால், ஐக்கிய மக்கள் சக்திக்கு திருடர்களுடன் எந்தவொரு ஒப்பந்தமும் இல்லை, மாறாக திருடர்களைப் பிடிக்கும் வேலையைத் தொடங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியால் தான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் நாட்டையே திவாலாக்கியவர்களை வெளிக்கொணர முடிந்தது.

ஊருக்கு ஊர், கிராமம் கிராமமாக மக்களின் கையொப்பம் பெற்று 220 இலட்சம் பேரின் அடிப்படை உரிமைகளை மீறிய அனைவருக்கும் எதிராக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து சமூக உரிமைகளை ஒழிக்கும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டுள்ளது-என்றார். (அ)

# வரிச்சுமை கண்டு பயப்படவேண்டாம்



கொழும்பு, டிசெ. 05

2024 ஆம் ஆண்டில் இலங்கை விரிவடையும் பொருளாதாரத்திற்குள் நுழையும் எனவும் மக்கள் தேவையற்ற வரிச்சுமையை கண்டு பயப்பட வேண்டாம் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு இலங்கை வற் வரி 24 விகிதமாக அதிகரிக்கும் என சில தரப்பினர் முன்வைத்துள்ள கணிப்புகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டளவில் விரிவடையும் பொருளாதாரத்திற்குள் இலங்கை பிரவேசிக்கும். புதிய வரிச்சுமைக்கு மக்கள் அச்சப்பட வேண்டாம்.

எதிர்காலத்தில் பொருளாதார நிலைமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பாதகமான கோணத்தில் முன்னோட்டங்களை உருவாக்கி வருகின்றனர்.

இருப்பினும், பொருளாதாரத்தை முற்றிலும் எதிர்மறையாகவோ அல்லது நேர்மறையாகவோ பார்க்காமல் நடுநிலையாக பார்க்க வேண்டும்-என்றார். (அ)

## தேசபந்து தென்னக்கோனின் பதவி நிரந்தரமாக்கப்படுவது அவசியம்!

மிஹிந்தலை விகாராதிபதி வலியுறுத்தல்



கொழும்பு, டிசெ. 05

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவேண்டும் என மிஹிந்தலை விகாராதிபதி வலியுறுத்தியுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில், மிஹிந்தலை ரஜமஹா விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட வந்தபோதே விகராதிபதி வலவாஹெங்குனவேவே தம்மரத்ன தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் பொது பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதான பதவியில் பணியாற்றுவதற்கு மாத்திரம் ஒருவரை நியமிப்பது பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா




பெங்களூர், டிசெ. 05

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 5ஈவது மற்றும் கடைசி இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த தொடரை 4-1 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

பெங்களூரில் இந்த போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இந்திய அணி முதலில் துடுப்படுத்தாடி, 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்ரேயஸ் ஐயர் 53 ஓட்டங்கள், அக்சர் படேல் 31 ஓட்டங்கள், ஜிதேஷ் சர்மா 24 ஓட்டங்கள் மற்றும் ஜெய்ஸ்வால் 21 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை அவுஸ்திரேலியா விரட்டியது.

ஜோஷ் பிலிப் மற்றும் டிராவிஸ் ஹெட் இன்னிங்ஸை தொடங்கினர். சீரான இடைவெளியில் இந்திய பந்துவீச்சாளர்கள் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களை வெளியேற்றினர். பென் மெக்டெர்மாட், 36 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்களில் ஹெட் 28 ஓட்டங்கள், அணித் தலைவர் மத்தியூ வேட் 22 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

இதில் வேட், கடைசி ஓவரில் ஆட்டமிழந்தார். அந்த ஓவரில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. அர்ஷ்தீப் சிங், அபாரமாக பந்து வீசி 3 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தார். 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழப்புக்கு அவுஸ்திரேலியா 154 ஓட்டங்கள் எடுத்தது. அதன் மூலம் 6 ஓட்டங்களில் போட்டியை வென்றது இந்தியா.

முகேஷ் சர்மா 3 விக்கெட்கள், ரவி பிஷ்னோய் மற்றும் அர்ஷ்தீப் சிங் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். அக்சர் படேல், ஒரு விக்கெட் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை அக்சர் படேல் வென்றார். தொடர் நாயகன் விருதை ரவி பிஷ்னோய் வென்றிருந்தார். (ஐ)

## ஐ. பி. எல்லின் ஊடக உரிம மதிப்பு ரூ. 16.3 இலட்சம் கோடியாக உயரும்

மும்பை, டிசெ. 05

ஐ. பி. எல். போட்டிகளுக்கான ஊடக உரிம மதிப்பு அடுத்த 20 ஆண்டுகளில் 5 ஆயிரம் டொலராக (இலங்கை மதிப்பில் ரூ. 16. 3 இலட்சம் கோடி) உயரும் என்று எதிர்பார்ப்பதாக ஐ. பி. எல். தலைவர் அருண் துமால் தெரிவித்தார்.

இந்தியாவில் ஆண்டுக்கு ஒருமுறை ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ரசிகர்களிடையே ஐ. பி. எல். மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், மிகப் பெரும் விளம்பர வருவாயை ஈட்டக்கூடியதாக அது உள்ளது. இதனால்,ஐ. பி. எல். போட்டிகளை ஒளிபரப்பு செய்வதற்கான உரிமம் பெறுவதில் ஊடகங்களிடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், 2043ஆம் ஆண்டு ஐ. பி. எல். போட்டிகளுக்கான ஊடக உரிம மதிப்பு 50 பில்லியன் டொலரை தொடும் என்று எதிர்பார்ப்பதாக துமால் குறிப்பிட்டார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐ. பி. எல். உரிம மதிப்பு 620 கோடி டொலரை (இலங்கை மதிப்பில் ரூ. 2 இலட்சத்து ஓராயிரம் கோடி) தொடும் என்று மதிப்பிடப்படுகிறது.

உலக அளவில், ஊடக உரிம மதிப்பின் அடிப்படையில் ஐ. பி. எல். 2ஆம் இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் நஷனல் புட்பால் லீக் உள்ளது. அதன் ஊடக உரிம மதிப்பு 11 ஆயிரம் கோடி டொலர் (ரூ. 36 இலட்சம் கோடி) ஆகும். (ஐ)

## கோடிகளை தொட்ட ஆஸி. வீரர்கள்


புதுடில்லி, டிசெ. 05

2023 உலகக் கிண்ணம் வென்ற சம்பியன் அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரர்களான பட் கம்மின்ஸ், டிராவிஸ் ஹெட், மிட்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹசில்வூட், ஸ்ரீவன் ஸ்மித், ஜாஷ் இங்லிஸ், ஷான் அபொட் உட்பட 25 ஆஸ்திரேலிய வீரர்கள் ரூ. 2 கோடி (இலங்கை மதிப்பில் சுமார் 7.8 கோடி ரூபாய்) என்னும் அடிப்படை விலையை நிர்ணயத்துடன் 2024 ஐ. பி. எல். தொடருக்கான வீரர்கள் ஏலத்துக்குள் நுழைந்துள்ளனர்.

வீரர்கள் ஏலம் வரும் 19ஆம் திகதி துபாயில் நடைபெறுகிறது. முதல் முறையாக இந்தியாவுக்கு வெளியே ஐ. பி. எல். ஏலம் நடைபெறுகிறது. அவுஸ்திரேலிய வீரர்கள் அடிப்படை விலையை ரூ.2 கோடி என நிர்ணயிக்க உலகக் கிண்ணத்தில் எழுச்சி பெற்ற நியூஸிலாந்தின் நாயக வீரர் ரச்சின் ரவீந்திராவோ தன் அடிப்படை விலையை ரூ.50 லட்சம் என்று நிர்ணயித்துள்ளார்.

அதிகபட்ச அடிப்படை விலையை நிர்ணயித்த மற்ற வீரர்களில் தென்னாபிரிக்காவின் புதிய நட்சத்திரம் சகலதுறை வீரர் கூட்ஸீ, இங்கிலாந்து சகலதுறை வீரர் ஹாரி புரூக் ஆகியோர் அடங்குவார்கள். ஹாரிபுரூக்கை சன்ரைசர்ஸ் அணி விடுவித்துவிட்டனர். 10 உரிமையாளர்களுக்கும் பூர்த்தி செய்ய 77 இடங்கள் உள்ளன. (ஐ)

## “காலமே தீர்மானிக்கும்”



புவனரஸ்அயர்ஸ், டிசெ. 04

எதிர்வரும் 2026 உதைபந்தாட்ட உலகக் கிண்ண தொடரில் விளையாடுவது குறித்து மெஸ்ஸி கருத்து கூறியுள்ளார்.

“நான் ‘2026 உலகக் கிண்ணம் குறித்து இப்போதைக்கு யோசிக்கவில்லை. ஆனால், என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதில் பங்கேற்க முடியாமல் போவதற்கு எனது வயது காரணமாக இருக்கலாம். இருந்தாலும் என்ன நடக்கிறது என பார்ப்போம். இப்போது 2024 ஜூனில் நடைபெறவுள்ள கோபா அமெரிக்கா தொடர் குறித்து கவனம் செலுத்தி வருகிறோம். அது எங்களுக்கு சாதகமாக அமைந்தால் வாய்ப்புள்ளது. அப்படி இல்லை என்றால் அது மிகவும் கடினம்.

நான் களத்தில் சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்தும் வரை தொடர்ந்து விளையாடுவேன். எனது எண்ணம் எல்லாம் கோபா அமெரிக்கா தொடர் மீது உள்ளது. அதன் பிறகு நான் விளையாடுவதை காலம் தீர்மானிக்கும். கட்டார் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு பிறகு எனது ஓய்வு முடிவு நேர்மாறாக அமைந்தது. இப்போது நான் அணியில் இருக்க விரும்புகிறேன். உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும் போது எனது வயது அதில் விளையாட அனுமதிக்காது என்பதை அறிவேன்” என்றும் சொன்னார். (ஐ)

### சொந்த மண்ணில் முதன்முதலாக

# நியூசிலாந்து அணியை வீழ்த்தியது பங்களாதேஷ்




சில்ஹெட், டிசெ. 05

சொந்த மண்ணில் முதன்முறையாக நியூஸிலாந்து அணியை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீழ்த்தி சாதனை படைத்தது பங்களாதேஷ் அணி.

நியூஸிலாந்து அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி சில்ஹெட் நகரில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 310 ஓட்டங்களும் நியூஸிலாந்து அணி 317 ஓட்டங்களும் எடுத்தன.

7 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் அணி 100.4 ஓவர்களில் 338 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக அணித்தலைவர் நஜ்முல் ஹூசைன் ஷன்டோ 105, முஸ்பிகுர் ரகிம் 67, மெஹிதி ஹசன் 50 ஓட்டங்கள் சேர்த்தனர்.

நியூஸிலாந்து அணி சார்பில் அஜாஸ் படேல் 4, இஷ் சோதி 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

332 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி பங்களாதேஷின் சுழற்பந்து வீச்சில் ஆட்டம் கண்டது.

ரொம் லதாம் 0, டெவன் கொன்வே 22, கேன் வில்லியம்சன் 11, ஹென்றி நிக்கோல்ஸ் 2, ரொம் பிளண்டல் 6, கிளென் பிலிப்ஸ் 12, கைல் ஜேமிசன் 9 ரன்களில் வெளியேறினர்

4ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் நியூஸிலாந்து அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 113 ஓட்டங்கள் எடுத்தது.

டரில் மிட்செல் 44, இஷ் சோதி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று முன்தினம் கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து அணி 71.1 ஓவர்களில் 181 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தனது 9ஆவது அரை சதத்தை கடந்த டேரில் மிட்செல் 120 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 58 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நயீம் ஹசன் பந்தை ஸ்வீப் ஷொட் விளையாட முயன்ற போது தைஜூல் இஸ்லாமிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய அணித் தலைவர் ரிம் சௌதி 24 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 34 ஓட்டங்களும், நிதானமாக விளையாடிய இஷ் சோதி 91 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 22 ஓட்டங்களும் சேர்த்த நிலையில் தைஜூல் இஸ்லாம் பந்தில் நடையை கட்ட நியூஸிலாந்து அணி 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

பங்களாதேஷ் அணி தரப்பில் தைஜூல் இஸ்லாம் 6 விக்கெட்களை வீழ்த்தினார். நயீம் ஹசன் 2 விக்கெட்களையும் ஷோரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரு இன்னிங்ஸையும் சேர்த்துகூட்டாக 10 விக்கெட்கள் வீழ்த்திய தைஜூல் இஸ்லாம் ஆட்ட நாயகனாக தெரிவானார். சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணியை டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி வீழ்த்துவது இதுவே முதன்முறையாகும்.

இதற்கு முன்னர் சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒன்றில்கூட பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது இல்லை. இதில் 3 போட்டிகளில் தோல்வியடைந்திருந்த பங்களாதேஷ் அணி 3 போட்டிகளை சமன் செய்திருந்தது. தற்போதைய வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வரும் நாளை மறுதினம் மிர்பூரில் தொடங்குகிறது. (ஐ)

# ஆர்ஜென்ரீனா அதிபர் தேர்தலில் வலதுசாரி வெற்றி : போக்லாந்து தீவுகள் முறுகல் நிலை முடிவுறுமா ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆர்ஜென்டினாவின் புதிய அதிபராக ஜேவியர் மிலி (Javier Milei) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையடுத்து, ஆர்ஜென்டினாவில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்ஜென்டினா அதிபர் தேர்தலில் தீவிர வலதுசாரி ஆதரவாளரான ஜேவியர் மிலே 55.8 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

ஆர்ஜென்டினாவில் முன்னைய அதிபர் ஆல்பெர்டோ பெர்னான்டஸின் பதவிக்காலம் முடிவடைய உள்ளதால், அங்கு அதிபர் தேர்தலுக்கான முதல் சுற்று போட்டி கடந்த அக்டோபர் மாதம் 22ம் தேதியும், 2வது சுற்று போட்டி நவம்பர் 19இல் நடந்து முடிந்தன.

தற்போதைய ஆட்சியில் பொருளாதாரத் துறை அமைச்சராக இருக்கும் செர்ஜியோ மாசா ரினியூவல் கட்சி சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து சுதந்திர கட்சியின் சார்பில் ஜேவியர் மிலே களம் இறங்கினார்.

தீவிர வலதுசாரி ஆதரவாளரான ஜேவியர் அரசு துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்து பணவீக்கத்தை கட்டுப் படுத்துவதாகவும் உறுதியளித்தார்.

இந்நிலையில், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜேவியர் மிலே 55.8 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

பொருளாதார அமைச்சரான செர்ஜியோ 44.2 வீத வாக்குகள் மட்டுமே பெற்றார். ஜேவியரின் வெற்றி, ஆர்ஜென்டினா 1983-ம் ஆண்டு ஜனநாயக நாடாக மாறிய பிறகு, நடத்தப்பட்ட அனைத்து கருத்துக்கணிப்புகளையும் மீறிய மாபெரும் வெற்றியாக கருதப்படுகிறது.



### குத்தாட்டம் போட்டு கொண்டாடிய அதிபர்!

ஆர்ஜென்டினாவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜேவியர் மிலி தனது வெற்றியை குத்தாட்டம் போட்டு கொண்டாடிய வீடியோ சமூக ஊடகத்தில் வைரலாகி வருகிறது.

ஜேவியர் மிலி தனது தேர்தல் வாக்குறுதியில் இரண்டு முக்கிய உறுதியை வழங்கி இருந்தார். அதில் முதலாவது ஆர்ஜென்டினா இனி டொலர் தேசம், மற்றொன்று மத்திய வங்கி நீக்கம் என்பதாகும்.

ஆர்ஜென்டினாவின் தற்போதைய பணவீக்கம் 142 சதவீதமாக இருக்கும் நிலையில், ஆர்ஜென்டினாவின் பீசோ நாணயத்தை பயன்பாட்டில் இருந்து நீக்கி விட்டு அமெரிக்க டொலரை அதிகாரப்பூர்வ பணமாக ஜேவியர் மிலி அறிவிக்கயுள்ளார்.

இவை ஆர்ஜென்டினாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய மாற்றம் ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. மேலும் ஆர்ஜென்டினாவை டொலர் தேசமாக மாற்ற அந்த நாட்டின் மத்திய வங்கியை மூடுவதாகவும் ஜேவியர் மிலி தேர்தல் வாக்குறுதி அளித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தென் அமெரிக்காவில் 2வது பெரிய நாடு:

ஆர்ஜென்டினா தென் அமெரிக்காவில் இரண்டாவது பெரியதும் உலகில் எட்டாவது பெரிய நாடும் ஆகும். ஸ்பானிய மொழி பேசும் நாடுகளுள் இதுவே பெரியது.

உலக வங்கிக் குழு, உலக வணிக அமைப்பு ஆகியவற்றின் தொடக்ககால உறுப்பு நாடுகளுள் ஒன்று. அத்துடன் 15 நாடுகள் குழு (சி-15), 20 முக்கிய பொருளாதாரங்கள் குழு ஆகியவற்றிலும் ஒரு நாடாக உள்ளது.

இலத்தீன் அமெரிக்காவின் மூன்றாவது பெரிய பொருளாதார வளமுள்ள நாடு. மனித வளர்ச்சி அடிப்படையில் மிக உயர்ந்த தரநிலையிலும் இது உள்ளது. இலத்தின் அமெரிக்காவில், ஆர்ஜென்டினா ஐந்தாவது பெரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியையும், மிகக்கூடிய வாங்கும் திறன் சமநிலையையும் கொண்டுள்ளது. ஆர்ஜென்டினா ஒரு பெரிய சந்தையாக இருப்பதாலும், பெரிய அளவு நேரடி வெளிநாட்டு முதலீடு உள்ளதாலும், மொத்த ஏற்றுமதிப் பொருட்களில் உயர் தொழில்நுட்ப உற்பத்திகளின் ஏற்றுமதி வீதம் காரணமாகவும், எதிர்கால வளர்ச்சிக்கான அடிப்படைகள் ஆர்ஜென்டினாவுக்கு உள்ளன என பொருளியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### போக்லாந்து தீவு முறுகல் நிலை:

சர்ச்சைக்குரிய போக்லாந்து தீவுகளைச் சுற்றிலும் பிரித்தானியா இராணுவ மயமாக்குதலில் ஈடுபட்டுள்ளது பற்றி ஐக்கிய நாடுகளில் தாம் முறையிடவிருப்பதாக ஆர்ஜென்டினா முன்பு முறையிட்டுள்ளது.




**ஆர்ஜெண்டின அதிபர் தேர்தலில் அதிகாரப்பூர்வ தகவல்படி ஜேவியர் மிலி 56 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில் தனது வெற்றியை ஆர்ஜென்டினா நாட்டின் புதிய அதிபர் துள்ளல் ஆட்டம் போட்டு கொண்டாடும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.**



1982 ஆம் ஆண்டு போக்லாந்து போரின் பின்னர், ஆர்ஜென்டீனாவுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் போக்லாந்து தீவுகள் தொடர்பாக அண்மைக் காலத்தில் முறுகல் நிலை உருவாகியுள்ளது.

மெர்க்கசூர் என்ற தென்னமெரிக்க வணிக நிறுவனம் போக்லாந்து கொடியுடன் செல்லும் கப்பல்களை தமது துறைமுகங்களூடாக செல்வதற்கு தடை விதித்திருந்தது.

போக்லாந்து மக்கள் பிரித்தானியர்கள். அவர்களது எதிர்காலத்தை அவர்களே தீர்மானிப்பார்கள். போக்லாந்து மக்கள் விரும்பினாலொழிய அர்ஜெண்டீனாவுடன் எவ்விதப் பேச்சுக்களிலும் தாம் ஈடுபடப் போவதில்லை, என பிரித்தானியா கூறியிருந்தது.

பிரேசில், உருகுவாய் போன்ற நாடுகள் இது விடயத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றன. ஏற்கனவே போக்லாந்து கப்பல்கள் தமது துறைமுகங்களுக்கு வர அவர்கள் தடை விதித்துள்ளனர். சிலியின் வெளியுறவுத்துறை அமைச்சரும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தார்.






### போக்லாந்து கருத்துக் கணிப்பு :

பிரித்தானியா 1833 ஆம் ஆண்டில் இருந்து போக்லாந்து தீவுகளைத் தம் வசம் வைத்திருக்கிறது. இத்தீவுகள் சுயாட்சி அரசைக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தின் கடல்கடந்த பிராந்தியமாகும். 1982 ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா இத்தீவுகளை ஆக்கிரமித்தது. இதைத் தொடர்ந்து ஆர்ஜென்டீனாவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்குமிடையே இரண்டு மாதங்களாக அறிவிக்கப்படாத போர் இடம்பெற்றது. இப்போரில் ஆர்ஜென்டீனாவின் தோல்வியுடன் தனது படைகளை அது பின் வாங்கிக் கொண்டது.

போக்லாந்து தீவு மக்கள் ஐக்கிய இராச்சியத்தின் நிருவாகத்தின் கீழ் தொடர்ந்திருப்பதற்குப் மிகப் பெரும்பான்மையாக வாக்களித்துள்ளார்கள்.

போக்லாந்து தீவில் 2013 இடம்பெற்ற பொது வாக்கெடுப்பில் 1,517 பேர் வாக்களித்திருந்தனர். இது மொத்த வாக்காளர்களில் 90 வீதம் ஆகும். மூவர் மட்டுமே எதிர்த்து வாக்களித்திருந்தனர். மொத்த மக்கள் தொகை 2,900 ஆகும். ஆர்ஜென்டீனா இத்தீவுகளுக்கு உரிமை கோரியதை அடுத்தே இக்கருத்துக் கணிப்பு இடம்பெற்றது.

கருத்துக் கணிப்பு முடிவுகளை வரவேற்ற பிரித்தானிய அரசு, அனைத்து நாடுகளும் போக்லாந்து மக்களின் முடிவை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. போக்லாந்து தீவுகள் ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டுப் பிராந்தியமாக உள்ள தற்போதைய அரசியல் நிலை நீடிக்க வேண்டுமா? என இப்பொது வாக்கெடுப்பின் போது மக்களிடம் கேட்கப்பட்டது.

### போக்லாந்து போர் தோல்வி:

1982 ஏப்ரல் 2 ஆம் நாள் ஆர்ஜென்டீனியப் படையினர் போக்லாந்து தீவுகளை முற்றுகையிட்டனர். இதனை அடுத்து பிரித்தானியாவின் கடற் படையினருடன் இரண்டு மாதங்கள் வரையில் இடம்பெற்ற சண்டையில் ஆர்ஜன்டீனா இறுதியில் சரணடைந்தது.

1982 போக்லாந்து தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே போர் இடம்பெற்றது. பிரித்தானியா போக்லாந்து தீவுகளை மட்டுமல்லாது, தெற்கு ஜோர்ஜியா உட்பட ஏனைய தெற்கு அத்திலாந்திக் பிராந்தியங்களையும் கைப்பற்றியது. இச்சண்டையில் 255 பிரித்தானியப் படையினரும், 650 ஆர்ஜென்டீனியப் படையினரும் கொல்லப்பட்டனர். மூன்று பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

1767 ஆம் ஆண்டில் ஸ்ப்பானிய இராச்சியத்திடம் இருந்து போக்லாந்து தீவுகளைப் பெற்றதாகவும், 1833 ஆம் ஆண்டில் பிரித்தானியா இத்தீவுகளைக் கைப்பற்றியதாகவும் ஆர்ஜன்டீனா கூறி வருகிறது. ஆனாலும், இத்தீவுகளில் தமது குடியேற்றம் முன்னரே ஆரம்பித்து விட்டதாகவும், அதனை விட்டுத்தர முடியாது எனவும் பிரித்தானியா கூறுகிறது. தொடர்ந்து தமது குடியேற்றம் இடம்பெற்று வந்ததாகவும், 1833 முதல் தாம் இதனை நிருவகித்து வருவதாகவும் பிரித்தானியா கூறுகிறது.

அடஹால்பா அமெரைஸ்

# பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் பழமைவாத கிறிஸ்தவர்கள் இடையே வலுக்கும் மோதல் - பின்னணி என்ன?



புனித பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் அமெரிக்காவில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் சக்தி வாய்ந்த தீவிர பழமைவாத மதகுருமார்களுக்கு இடையேயான பதற்றம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

தனது நிர்வாகத்தை வெளிப்படையாக விமர்சிக்கும் ஓய்வுபெற்ற அமெரிக்க கார்டினல் ரேமண்ட் லியோ பர்க்கை வத்திக்கானில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற இந்த வாரம் பாப்பரசர் பிரான்சிஸ் முடிவு செய்தார்.

அவரது அணுகுமுறைகள் மற்றும் சீர்திருத்தங்களை எதிர்த்த மற்றொரு கடுமையான விமர்சகரும், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள டைலர் மறைமாவட்டத்தின் பிஷப்பாக இருந்த ஜோசப் ஸ்ட்ரிக்லேண்டை நீக்கிய மூன்று வாரங்களுக்குப் பிறகு அவர் அந்த முடிவை எடுத்தார்.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் கத்தோலிக்கத் திருச்சபையில் மிகவும் வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பார்வையை ஊக்குவிக்கும் பாப்பரசரின் கருத்தியல் போராட்டத்தில் மற்றொரு திருப்பத்தை பிரதிபலிக்கின்றன.



கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியக் கோட்பாடுகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ள தீவிரப் பழமைவாதக் கருத்தியல்வாதிகள் பாப்பரசரின் நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகவில்லை.

இதற்குப் பின்னால் என்ன நடந்தது என்பதை பகுப்பாய்வு செய்வோம்.

### கார்டினல் ரேமண்ட் பர்க் செய்த விமர்சனம்

கத்தோலிக்க திருச்சபையில் ஒரு செல்வாக்கு மிக்க நபரான ரேமண்ட் பர்க், பாப்பரசர் பிரான்சிஸை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக விமர்சித்து வந்தார். திருச்சபையின் தீவிர பழமைவாத எதிர்ப்பின் மைய நபராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

பாப்பரசர் பிரான்சிஸின் பல்வேறு முன்முயற்சிகளுக்கு, குறிப்பாக முற்போக்கான சீர்திருத்தங்களை ஆதரிப்பவர்களுக்கு அவர் குரல் கொடுத்ததை அவர் விமர்சித்தார்.

அதே போல் திருச்சபைக் கோட்பாடு மற்றும் நடைமுறையில் பாப்பரசரின் முற்போக்கான அணுகுமுறையுடன் அவர் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். இவை சமீபத்திய ஆண்டுகளில் பதட்டத்திற்கு முக்கிய ஆதாரங் களாக இருந்தன.

### யார் இந்த கார்டினல் ரேமண்ட் பர்க்?

75 வயதான ரேமண்ட் பர்க், ஓரின ஈர்ப்பாளர் சமூகத்தின் மீதான கிறித்தவத் திருச்சபையின் தற்போதைய நிலைப்பாடு குறித்து விமர்சித்து வருகிறார்.

பிரான்சிஸ் பாப்பரசராக பொறுப்பேற்றுக்கொண்ட பின் இதனை வெளிப்படையாக எதிர்த்துவந்தார்.

இதேபோல் திருச்சபை விவகாரங்களில் பாமரர்களின் பங்கு குறித்த பிரச்சினைகளில் வத்திக்கானின் அணுகுமுறையை வெளிப்படையாக தொடர்ந்து எதிர்த்துவந்தார்.

திருச்சபையின் நிறுவப்பட்டத் தலைமையை ஏற்க வெளிப்படையாக மறுக்கும் தீவிர பழமைவாத கத்தோ லிக்க இயக்கங்களிலும் அவர் இணைந்து பணியாற்றிவருகிறார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில், பிரான்சிஸ் அவரை வத்திக்கான் குடியிருப்பில் இருந்து வெளியேற்றவும், அவரது சம்பளத்தை ரத்து செய்யவும் முடிவு செய்தார். இது அர்ஜென்டினாவைச் சேர்ந்த பாப்பரசர் பிரான்சிஸின் பதவிக்காலத்தில் மிகவும் அதிரடியான நடவடிக்கையாகும்.

கத்தோலிக்கத் திருச்சபையில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்க இறையியலாளர் மற்றும் நியதி வழக்கறிஞரான டான் கோல்ட்ஸ்டைன், “பிரான்சிஸை விமர்சித்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு, போப்பின் உயர்ந்த தார்மீக அதிகாரியாக தன்னை நிலைநிறுத்த முயன்ற பிறகு ரேமண்ட் பர்க் தண்டிக்கப்பட்டார்,” என்று கூறினார்.

வத்திக்கானின் முக்கிய நபராக உள்ள ஒருவர், அவர் பங்கிற்கு, இந்த முடிவு தனிப்பட்ட தண்டனை அல்ல

என்றும், திருச்சபையின் தலைவரை விமர்சிக்கும் போது ஒரு நபர் கார்டினலுக்கான சலுகைகளை அனுபவிக்கக்கூடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலானது என்றும் விளக்கினார்.

### பிஷப் ஸ்ட்ரிக்லேண்ட் மீதான நடவடிக்கை

நவம்பர் 11-ஆம் தேதி, டெக்சாஸ் மாகாணத்தின் டைலர் மறைமாவட்டத்தின் பிஷப் ஜோசப் இ ஸ்ட்ரிக்லேண்ட், வத்திக்கான் விசாரணையைத் தொடர்ந்து ராஜினாமா செய்ய மறுத்ததால், பாப்பரசர் பிரான்சிஸ் அவரை பதவியில் இருந்து நீக்கினார்.

ஸ்டிரிக்லேண்டின் நிதி நிர்வாகத்தில் முறைகேடுகளை கண்டறிந்த விசாரணையின் இறுதியில், அவர் பதவியில் நீடிக்கக் கூடாது என்ற முடிவை வத்திக்கான் எடுத்திருந்தது.

“குற்றம் எதுவும் கண்டறியப்படவில்லை, தவறான நிர்வாகம் மட்டுமே இருந்ததாக விசாரணையில் தெரியவந்தது. வேறு எந்த பிஷப் இந்த இடத்தில் இருந்திருந்தாலும், அவர் நீக்கப்பட்டிருக்க மாட்டார்,” என்கிறார் கோல்ட்ஸ்டைன்.

பொதுவான கருத்து என்னவென்றால், பிஷப் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு அவர் மீதான குற்றச்சாட்டு காரணமாக அமையவில்லை என்றும், பாப்பரசர் பிரான்சிஸை அவர் எதிர்ப்பது தான் காரணம் என்றும் இறையியலாளர்கள் கூறுகின்றனர்.

“ஸ்டிரிக்லாண்ட் தனது மறைமாவட்டத்தை தவறாக நிர்வகிப்பது மட்டுமல்லாமல், அவர் இணையத்தில் அதிக நேரம் செலவழித்து, பாப்பரசரை புறக்கணிக்குமாறு விசுவாசிகளிடம் வேண்டுகோள்களை விடுத்துக் கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், அப்போஸ்தலர்கள் மூலம் ஏசுநாதர் வெளிப்படுத்திய நம்பிக்கைகளை குறைத்து மதிப்பிட்டதாகவும் பாப்பரசர் மீது குறைகூறிக்கொண்டிருந்தார்,” என்று



இறையியலாளர் கோல்ட்ஸ்டைன் விளக்குகிறார்.

இது குறித்து கோல்ட்ஸ்டைன் வாதிடுகையில், அத்தகைய குற்றச்சாட்டைச் சொல்வது ‘பாப்பரசரைப் பொறுத்தவரை பிளவுகளை ஏற்படுத்துவதாகும்,” என்கிறார்.

“மேலும், அவர் ஒரு மோசமான நிர்வாகியாக இருந்தது, அவரை வெளியேற்ற போப் பிரான்சிஸின் நடவடிக்கைக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது என்பது முற்றிலும் புரிந்துகொள்ளத்தக்கது,” என்று அவர் கூறுகிறார்.

2012-இல் மறைந்த போப் பெனடிக்ட்டால் நியமிக்கப்பட்ட ஸ்டிரிக்லேண்ட், கருக்கலைப்பு, திருநங்கைகளின் உரிமைகள் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணம் போன்ற சமூகப் பிரச்னைகளில் திருச்சபையின் நிலைப்பாட்டைப் புதுப்பிக்கும் பாப்பரசர் பிரான்



சிஸின் முயற்சிகளுக்கு எதிராக தொடர்ச்சியான கருத்துக்களை முன்வைத்து வந்தார்.

திருச்சபை சமூக ஊடகங்களை, அவர் வத்திக்கானின் தற்போதைய தலைவருடன் தனது கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்த ஒரு தளமாக அடிக்கடி பயன்படுத்தியுள்ளார்.

இந்த வாரம்தான், அவர் தனது சொந்த யூடியூப் சேனலைத் தொடங்குவதாக அறிவித்திருந்தார். அதில் அவர் கத்தோலிக்க மதத்தைப் பற்றிய தனது கருத்துக்களைப் பெருக்க முயற்சிக்கப்போவதாகவும் கூறிவந்தார்.



### நிர்வாக ரீதியான நடவடிக்கைகள்

கர்தினால் ரேமண்ட் பர்க் மற்றும் ஸ்டிரிக்லேண்டுடன் பாப்பரசர் பிரான்சிஸ் மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கைகள் நிர்வாக ரீதியானவையே தவிர இருவரின் மீதான குற்றச்சாட்டினால் அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

“ஆனால் இருவரும் ஒரு பிஷப்பிற்கு தகுந்தாற்போல் செயல்படவில்லை என்பதை தங்கள் தனிப்பட்ட வழியில் நிரூபித்துள்ளனர். (16ம் பக்கம் பார்க்க)

# பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் போப் உடன் இணைந்து செயல்படவேண்டும் என்பது தான் நடைமுறையே ஒழிய, அவருக்கு எதிராக ஒருபோதும் செயல்பட முடி யாது," என்று கோல்ட்ஸ்டைன் கூறுகிறார். மேலும் அவர் பேசும் போது, "போப்பின் கீழ் உள்ள திருச்சபையின் ஒற்றுமைக்காக, ஒவ்வொரு பிஷப்பின் மனந்திரும்புதலும் பணிவும் தான் சிறந்த பதிலாக இருக் கமுடியும். ஆனால் அது உண்மையில் நடக்குமா இல் லையா என்பது ரேமண்ட் பர்க் மற்றும் ஸ்டிரிக்லேண் டின் விருப்பங்களில் தான் உள்ளது," என்றார்.

**அமெரிக்காவை விமர்சித்த பாப்பரசர்**

எப்படியிருந்தாலும், பாப்பரசர் பிரான்சிஸ் கத்தோ லிக்க திருச்சபையின் தீவிரப் பழமைவாதப் பிரிவுகளுக்கு தனது எதிர்ப்பை மேலும் மேலும் வெளிப்படையாகக் காட்டியுள்ளார்.

ஆகஸ்ட் மாதம் லிஸ்பனில் (போர்ச்சுகல்) கத்தோ லிக்க இளைஞர்கள் கூட்டத்தில் ஜேசுயிட்டுகளுடனான சந்திப்பின் போது பாப்பரசர் அமெரிக்காவில் செயல்ப டும் கத்தோலிக்கத் திருச்சபையின் கடுமையான போக்கை நேரடியாக சுட்டிக்காட்டி பேசினார்.

"அமெரிக்காவில் நிலைமை எளிதானது அல்ல. மிகவும் வலுவான பிற்போக்கு மனப்பான்மை அங்கே காணப்படுகிறது," என்று அவர் அப்போது கூறினார்.

"நீங்கள் அமெரிக்காவிற்குச் சென்றுள்ளீர்கள், அங்கே ஒரு கடுமையான நடைமுறைகளை உணர்ந்ததாகச் சொல் கிறீர்கள். ஆம், சில சூழ்நிலைகளில் இந்த கடுமையைக் காண முடியும்," என்று அவர் அங்கிருந்தவர்களிடம் கூறி னார்.

"நம்பிக்கை மற்றும் ஒழுக்கம் பற்றிய வாதவிவாதங்க ளைப் புரிந்துகொள்வதில் பரிணாமம் மாறிவருகிறது," என்றதுடன், இது போன்ற நிலையில், பின்னோக்கிச் செல்வது 'பயனற்றது" என்பதைப் புரிந்துகொள்ளவேண் டும் என்றும் போப் பிரான்சிஸ் தன்னை விமர்சிப்பவர்க ளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

உதாரணமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சில பாப்பரசர்கள் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த வகையான கருத்துக்கள், திருச்சபையின் தீவிர பழமைவாதிகள் மத் தியில், அதன் தலைமையின் மீது வெளிப்படையான எதிர்ப்பை ஏற்படுத்தவில்லை என்ற போதிலும் ஆழமான அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

**அமெரிக்காவில் பழமைவாதிகளின் கடும்போக்கு**

பாப்பரசர் பிரான்சிஸ் நடவடிக்கை மேற்கொண்ட கார்டினல் மற்றும் பிஷப் இருவரும் அமெரிக்காவில் உள்ள கத்தோலிக்க திருச்சபைக்குள் பெருகிய முறை யில் சக்திவாய்ந்த பழமைவாதிகளாக இருந்துள்ளனர்.

33 கோடிக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் அமெ ரிக்காவில், கத்தோலிக்கர்கள் ஏறக்குறைய 20 வீதம் மக் கள் தொகையாக இருக்கின்றனர். ஆய்வுகளின்படி, முற் போக்கான நிலைப்பாடுகளைக் கொண்ட விசுவாசிக ளின் எண்ணிக்கைக்கும் பழமைவாத கருத்துக்களைப் பாதுகாப்பவர்களுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட சம நிலை உள்ளது.

அமெரிக்கத் திருச்சபை படிநிலையானது 16 கார்டி னல்கள் உட்பட 434 செயலில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற பிஷப்புகளால் ஆனது.

மேலும், அமெரிக்காவின் கத்தோலிக்கத் திருச்சபை யின் உயர் கட்டளை, அர்ஜென்டினாவைச் சேர்ந்த பாப் பரசர் பிரான்சிஸின் தலைமை அறிமுகப்படுத்தும் சீர்தி ருத்தங்களை எதிர்த்து வருகிறது.

திருச்சபை வழிபாட்டு முறை மற்றும் அறநெறியில் சீர்திருத்தம் செய்வதற்கான வத்திக்கானின் முயற்சிகளை அமெரிக்கத் திருச்சபையின் உயர் கட்டளை தீவிரமாக எதிர்த்து வருகிறது.

"பிரான்சிஸை எதிர்ப்பவர்கள் பெரும்பான்மையா னவர்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அதிக அதிகாரம் கொண்டவர்கள் என்பதுடன், பல ஆண்டுகளாக அமெரிக்க ஆயர்களைக் கட்டுப்படுத் தும் இடத்தில் இருந்து வருகின்றனர்," என்று டான் கோல்ட்ஸ்டைன் கூறுகிறார்.

**அமெரிக்கத் திருச்சபையின் நிலைப்பாடு**

இந்த 'அல்ட்ராகன்சர்வேடிவ்கள்' பாலியல், ஒரே பாலின திருமணம், பிறப்பு கட்டுப்பாடு மற்றும் கருக்க லைப்பு போன்ற பிரச்சினைகளில் பழமைவாதக் கருத் துக்களை மட்டுமே ஆதரிக்கின்றனர்.

மேலும், அவர்கள் பாரம்பரியமாக பாப்பரசரின் அதிகாரத்தை ஆதரித்தாலும், பல ஆண்டுகளாக அவர் கள் மிகவும் தாராளவாதமாக கருதும் அணுகுமுறைக ளுக்காக - குறிப்பாக LGTBQIA சமூகத்தை ஏற்பது

போன்ற சமகால சமூக யதார்த்தங்களைத் தழுவுவது - திருச்சபையின் தலைவர் மீது தங்கள் விமர்சனங்களை எழுப்பிவருகின்றனர்.

காலநிலை மாற்றம், குடியேற்றம், சமூக நீதி, துப்பாக் கிக் கட்டுப்பாடு மற்றும் மரண தண்டனை போன்ற விஷயங்களிலும் அவர்கள் பிரான்சிஸிடமிருந்து வேறுப டுகிறார்கள்.

கோல்ட்ஸ்டைன், இது வர்த்தக உலகில் பெரும்பா லானோரின் ஆதரவுடன் செயல்படும் மிகவும் சக்தி வாய்ந்த குழுவாகும் என்றும், பாப்பரசரைப் பற்றிய கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை விரிவுபடுத்தும் பரந்த ஊடக வலையமைப்பைக் கட்டுப்படுத்துகிறது என்றும் விளக்குகிறார்.

"பல ஆண்டுகளாக, குறிப்பாக அமெரிக்காவில், அவர் களின் ஊடகங்கள் கத்தோலிக்கர்களின் பேச்சாளர்களாக வும், அவர்களின் கதைகள் அங்கீகரிக்கப்பட்ட கதைக ளாகவும் இருக்கிறது," என்று இறையியலாளர் கோல்ட்ஸ் டைன் கூறுகிறார்.

மற்ற பிரச்சினைகளுக்கு மத்தியில், கருக்கலைப்பு குறித்த சர்ச்சை அமெரிக்கக் கத்தோலிக்க உயரடுக்கு களை தீவிரமானவர்களாக மாற்றி வருகிறது என்று அவர் வாதிடுகிறார்.

கத்தோலிக்கத் திருச்சபை ஒட்டுமொத்தமாக தன்னை "ஒரு சார்பானது" அல்லது கருக்கலைப்புக்கு எதிரானது என்று அறிவிக்கும் அதே வேளையில், பெண்களின் தேர்வு உரிமைக்குச் சாதகமான கருத்தியல் நிலைப்பாடு அமெரிக்க ஜனநாயகக் கட்சியால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

கோல்ட்ஸ்டைனின் கூற்றுப்படி, பழமைவாதக் குடி யரசுக் கட்சி தன்னை கத்தோலிக்கர்களின் பாதுகாவல ராக நிலைநிறுத்தவும், தீவிர பழமைவாத பிஷப்புகளின் ஆதரவுடன், திருச்சபையின் முக்கிய அரசியல் கூட்டாளி யாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்பது டன், இரு கருத்தியல்வாதிகளின் தார்மீக நிலைகள் மற்றும் சித்தாந்தத்தை சீரமைக்க உதவியது என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

